Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

THURSDAY, DECEMBER 19 2024

வியாழக்கிழமை,19 டிசெம்பர் 2024 | ஒளி: 10 கதிர் 118 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE



# VAT நீக்கம் PAYE இல் திருத்தம்

- யோகட், பால்சார் உற்பத்தி மீதான வற் திருத்தம்
- வரி விதிப்பை தவிர்த்துகொள்ள முடியும்
- வாகனச் சந்தை கட்டம் கட்டமாக திறக்கப்படும்
- பாடசாலை மாணவர்களுக்கு 6000 ரூபாய் கொடுப்பனவு

ஏப்ரல் மாதமளவில் பெறுமதி சேர் வரி (VAT) நீக்கப்படும் என்று தெரிவித்த ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) வரம்பை அதிகரிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்றார். இந்தியாவுக்கான மூன்று நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை நிறைவு செய்துகொண்டு, புதன்கிழமை (18) நாடு திரும்பிய ஜனாதிபதி, பாராளுமன்றத்துக்கு வந்து உரையாற்றும் போதே மேற்கண்ட அறிவிப்பை விடுத்தார்.

2028 ஆம் ஆண்டிளவில் கடன் செலுத்தப்படவிருப்பதால் நாடு மீண்டும் வங்குரோத்து நிலைக்குச் செல்லும் என்ற எண்ணம் தோற்றுவிக்கப்படுகிறது. 2028 இலும் எமது அரசாங்கமே இருக்கப்போகிறது என்பதை நினைவில் கொள்ளுங்கள். அதேபோல் 2022 - 2023 களில் ஏற்பட்டது போன்ற நிலைமை மீண்டும் ஏற்படுவதற்கு நாம் ஒருபோதும் இடமளியோம்.

தொடர்ச்சி P2



## வவுனியாவில் மாரடைப்பால் 45 பேர் மரணம்

க. அகரன்

வவுனியா பொது வைத்தியசாலையில் இவ்வாண்டு ஜனவரி முதல் ஒக்டோபர் வரையுமான 10 மாத காலப்பகுதியில் மாரடைப்பால் 45 பேர் மரணம் அடைந்திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் ஊடாக கோரப்பட்ட தகவலுக்கு அமைய குறித்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "உடன்படிக்கை கைச்சாத்திடவில்லை"



வலுச் சக்தி தொடர்பான கலந்துரையாடல்களை தொடர்ந்தும் இந்தியாவுடன் முன்னெடுத்துச் செல்வதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதே தவிர, அது தொடர்பில் அரசாங்கத்தினால் எந்தவொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை என்று வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் நளீன் பண்டாரவினால் ஜனாதிபதியின் இந்திய விஜயம் தொடர்பில் எழுப்பிய கேள்விகள் தொடர்பில் பதிலளிக்கையிலேயே அமைச்சர் இவ்வாறு கூறினார். நளீன் பண்டார கேள்வியெழுப்பி உரையாற்றுகையில் இம்முறை ஜனாதிபதி இந்தியாவுக்கு செல்லும் போது ரணில் விக்கிரமசிங்க கையெழுத்திட்ட மற்றும் இணங்கிய ஒப்பந்தங்களுக்கு நீங்கள் இறப்பர் முத்திரையை பொறித்து வந்துள்ளீர்கள்.

தொடர்ச்சி P2

## ஹர்ஷவிடம் COPF அரசிடம் 'கோப்'



அரசாங்க நிதி பற்றிய குழுவின் (Committee on Public Finance) (COPF) தலைவர் பதவிக்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட எம்.பி.யான கலாநிதி ஹர்ஷ த சில்வா நியமிக்கப்பட்டுள்ளார்.

பாராளுமன்றம் புதன்கிழமை (18) சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கூறிய நிலையில் சபாநாயகர் அறிவிப்பின்போதே இவ்வாறு அறிவிக்கப்பட்டது.

தொடர்ச்சி P2



## நிசாம் காரியப்பர் பதவிப் பிரமாணம்

ஐக்கிய மக்கள் சக்தியை பிரதிநிதித்துவப்படுத்தி தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினராக மொஹமட் நிசாம் காரியப்பர் சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன முன்னிலையில் புதன்கிழமை (18) பதவிப் பிரமாணம் செய்துகொண்டார்.

கடந்த நவம்பர் 21 ஆம் திகதி பத்தாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வு இடம்பெற்றதுடன், அன்றைய தினம் புதிய உறுப்பினர்கள் பதவிப்பிரமாணம் செய்தனர். அதுவரை ஐக்கிய மக்கள்சக்திக்குக் கிடைத்த நான்கு தேசியப்பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்கான பெயர் வர்த்தமானியில் வெளியிடப்பட்டிருக்கவில்லை.

கடந்த 12 ஆம் திகதி இந்தப் புதிய பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்கள் அடங்கிய வர்த்தமானியை தேர்தல்கள் ஆணைக்குழு வெளியிட்டிருந்தது. இதற்கு அமைய அந்த நான்கு உறுப்பினர்களில் மூவர், செவ்வாய்க்கிழமை (17) பதவிப்பிரமாணம் செய்தனர். மொஹமட் நிசாம் காரியப்பர் புதன்கிழமை (18) பதவிப்பிரமாணம் செய்து கொண்டார்.

## "நிரூபித்தால் பதவியை துறப்பேன்"



எனது தந்தை ஜனாதிபதியாக இருந்தபோது சட்டக் கல்லூரி இறுதியாண்டு பரீட்சையை குளிரூட்டப்பட்ட பிரத்தியேக அறையிலிருந்து எழுதியதாக முன்வைக்கும் குற்றச்சாட்டை சட்டத்தின் முன் நிரூபித்தால் பாராளுமன்ற உறுப்புரிமையை துறப்பேன் என பொதுஜன பெரமுனவின் எம்.பி.யான நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) சிறப்புரிமை மீறல் பிரச்சினையை முன்வைத்து உரையாற்றிய நாமல் ராஜபக்ஸ எம்.பி.,

நான் உயிரச்சுறுத்தல் விடுத்ததால் பேராசிரியர் ஒருவர் நாட்டை விட்டு வெளியேறியதாக குறிப்பிடப்படுகிறது. தேசிய மக்கள் சக்தியின் அரசாங்கமே தற்போது உள்ளது. ஆகவே முறையான விசாரணை செய்யுங்கள். நான் பரீட்சைக்கு தோற்றிய விதம் தொடர்பில் முறைப்பாடுகள் இருந்தால் விசாரணை செய்யுங்கள்.

தொடர்ச்சி P2

## அர்ச்சுனாவின் உரை நீக்கப்பட்டது



யாழ் வைத்தியசாலை தொண்டர் அடிப்படையிலான ஊழியர்கள் தொடர்பில் விசேட கூற்றை முன்வைத்து உரையாற்றிய யாழ். மாவட்ட எம்.பி.யான இராமநாதன் அர்ச்சுனா, சபைக்கும் நிலையியற் கட்டளைகளுக்கு முரணாக பேசியதினால் அவரின் உரை சபாநாயகரால் ஹன்சாட்டில் இருந்து நீக்கப்பட்டது.

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் பாராளுமன்றம் புதன்கிழமை(18) கூடியது. பிரதான நடவடிக்கைகள் நிறைவடைந்ததன் பின்னர், விசேட கூற்றை முன்வைக்க இராமநாதன் அர்ச்சுனா எம்.பிக்கு, சபாநாயகர் அனுமதியளித்தார்.

தொடர்ச்சி P2

## "அரசியலிலிருந்தே நான் விலகுவேன்"



தனது முன்பள்ளி அனுமதி சான்றிதழ் தொடக்கம் தன்னுடைய சகல கல்விச் சான்றிதழ்களையும் கல்வி கற்ற பாடசாலைகள் கல்லூரிகளின் விபரங்களையும் சபைக்கு சமர்ப்பித்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச .சில வேளைகளில் தனது பிறப்பை பற்றியும் ஏதாவது கேட்பார்கள் என்பதனால் பிறப்பு சான்றிதழையும் கொண்டுவந்ததாகக்கூறி அதனையும் சபைக்கு சமர்ப்பித்தார்.

அத்துடன் தன்னால் சமர்ப்பிக்கப்பட்ட சான்றிதழ்கள் போலியானவை என யாராவது நிரூபித்தால் எம்.பி பதவியை துறந்து, எதிர்க்கட்சி தலைவர் பதவியையும் துறந்து. அரசியலிலிருந்து விலகுவேன் எனவும் கூறினார். பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) விசேட கூற்றை முன்வைத்தே இவற்றை சபைக்கு சமர்ப்பித்த எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச மேலும் உரையாற்றுகையில், எனது கல்வித் தகைமைகளுக்கு சவால் விடுத்து அமைச்சரவைப் பேச்சாளர் அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ வெளியிட்ட கருத்துக்கு பதிலளிக்கும் முகமாகவும்,

தொடர்ச்சி P2

## நீர்க் கட்டணமாக 5 ரூபாய் மட்டுமே அறவிட்டு மோசடி

புகையிரத திணைக்களத்திற்கு சொந்தமான இரத்மலானை மற்றும் கொத்தலாவலபுரவில் உள்ள 546 புகையிரத வீடுகளில் வசிக்கும் அதிகாரி ஒருவரிடமிருந்து தண்ணீர் கட்டனமாக மாதாந்தம் 5 ரூபாய் அறவிப்பட்டுள்ளது என்று தேசிய கணக்காய்வு காரியாலயம் அறிவித்துள்ளது.

2021 பெப்ரவரி 6ஆம் திகதி முதல் 2023 டிசெம்பர் 31ஆம் திகதிவரை 9 கோடியே 23 இலட்சத்துக்கு 98 ஆயிரத்து 532 ரூபாய், புகையிரத திணைக்களத்தினால் செலுத்தப்பட்டுள்ளது என்றும் கணக்காய்வு காரியாலயம் அறிவித்துள்ளது.

இரத்மலானை, கொத்தலாவலபுர புகையிரத திணைக்களத்தில் உள்ள 546 புகையிரத வீடுகளுக்கான நீர் கட்டணமாக வருடாந்தம் 30 மில்லியன் ரூபாவிற்கு மேல் புகையிரத திணைக்களம் செலுத்துவதாக கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த வீடுகளில் தண்ணீர் மீட்டர்களை முறையாக பொருத்தி செலவுகளை நிர்வகிக்க வேண்டும் என கணக்காய்வு அறிக்கையில் பரிந்துரை செய்துள்ளது. இந்நிலையில், 546 அடுக்குமாடி குடியிருப்புகளில் 509 குடியிருப்புகளில் புதிய தண்ணீர் மீட்டர் பொருத்தி மொத்தமாக சப்ளை செய்து முடிக்கப்பட்டுள்ளதாக ரயில்வே துறை கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது. மீதமுள்ள 07 புகையிரத வீடுகளுக்கு நீர் மீட்டர் பொருத்தப்படாத நிலையில் மீதியுள்ள வீடுகள் தற்போது ஆளில்லாத வீடுகளாக காணப்படுவதாகவும் கணக்காய்வு அதிகாரி குறிப்பிட்டுள்ளார்.

தேசிய தணிக்கை அலுவலகம் 16.12.2024 அன்று வெளியிட்ட சமீபத்திய கணக்காய்வு அறிக்கையின் பிரகாரம், தண்ணீர் மீட்டர்கள் பொருத்தப்பட்டதால், திட்டமிட்டபடி தண்ணீர் கட்டணம் வசூலிக்கப்படுகிறது என்றும் கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

### மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை கோருவது ஏன்?



மாகாண சபைகளுக்கு மத்திய அரசாங்கம் வழங்கும் நிதி அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு கூட போதாது. இதன் காரணமாகவே மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை கோருகிறோம் என தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா.சாணக்கியன் தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் மட்டக்களப்பில் பாலங்கள் நிர்மாணிப்பு

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# VAT நீக்கம்...

எமது வெளிநாட்டு கையிருப்பை 2028 ஆம் ஆண்டளவில் 15.1 பில்லியன் டொலர்களாக அதிகரித்துக்கொள்ளும் எதிர்பார்ப்புடன் நாம் இருக்கிறோம். 15.1 டொலர் பில்லியன்களை ஈட்டிக்கொள்ள முடியும் என்ற வலுவான நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

பொதுத்தேர்தல் நிறைவடைந்த பின்னர் நவம்பர் 16 ஆம் திகதி நாம் மீண்டும் சர்வதேச நாணய நிதியத்துடன் மூன்றாவது மீளாய்வை ஆரம்பித்தோம். இரண்டாவது மீளாய்வில் முன்னைய அரசாங்கத்தினால் எட்டப்பட்ட அடைவுகள்,இணக்கப்பாடுகள் பல காணப்பட்டன.

அவற்றில் ஒன்று, வாடகை வருமான சொத்துக்கள் மீது 2025 ஆம் ஆண்டிலிருந்து வாடகை வருமான வரி விதிப்பது குறித்த இணக்கப்பாடு இரண்டாவது மீளாய்வில் எட்டப்பட்டிருந்தது. அதேபோல் ஏற்றுமதிச் சேவை மீது நூற்றுக்கு முப்பது வீதமான நிறுவன வரி, ஏற்றுமதிச் சேவைக்கு 30 வீத வரி விதிக்கவும் இரண்டாவது மீளாய்வில் இணக்கம் காணப்பட்டிருந்தது. அதேநேரம், ஜனவரியிலிருந்து விசேட வர்த்தக பொருட்கள் மீதான வரியை நீக்கி, பெறுமதி சேர் வரியுடன் இணைப்பது குறித்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தது. இந்த விசேட வர்த்தக பொருட்கள் மீதான சேவை வரியினாலேயே எமது நாட்டின் உள்நாட்டு உற்பத்தியாளர்களை பாதுகாப்பதற்காக வரி விதிப்பு, வரி அதிகரிப்பு, வரி குறைப்பு ஆகியவற்றை செய்கிறோம். இரண்டாவது மீளாய்வு கூட்டத்தில் இந்த சட்டத்தை இரத்துச் செய்ய தீர்மானிக்கப்பட்டிருந்தது. அதற்கு பதிலாக 'வற்' வரி விதிக்க தீர்மானிக்கப்பட்டது. அதேபோல், தனிப்பட்ட வருமானம் மீதான வரியற்ற எல்லைகளை அவ்வண்ணமே தக்க வைக்கவும் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

2025 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதமளவில், இலகுபடுத்தப்பட்ட பெறுமதி சேர் வரியை (Value Added Tax ) நீக்குவதற்கான இணக்கமும் எட்டப்பட்டிருந்தது. 'வற்' வரியின் ஊடாக வர்த்தகர்களுக்கு அவசியமான கடனை விரைவில் பெற்றுக்கொள்ளக்கூடிய வாய்ப்பு இருந்தது. இருப்பினும் அதனை நீக்குவதற்கான யோசனையொன்று கொண்டுவரப்பட்டிருந்தது.

**உழைக்கும் போது செலுத்தும் வரி எல்லை அதிகரிப்பு**

மூன்றாவது மீளாய்வை ஆரம்பிக்கும் வேளையில் எமது நாட்டின் தொழில்வான்மையாளர் மீது விதிக்கப்பட்டிருந்த வரி தொடர்பில் தொழில்வான்மையாளர்கள் அதிருப்தியில் இருந்தனர். பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் சங்கம், வைத்தியர்களின் சங்கம், வங்கி முகாமையாளர்கள் சங்கம் உள்ளிட்ட பெருமளவானவோர் இந்த உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) தொடர்பில் அதிருப்தியில் இருந்தனர்.

வரி எல்லை,100,000 ரூபாயில் இருந்து 150,000 வரை அதிகரித்துள்ளோம். அதேபோல், 6 சத வீதத்திற்குள் அடங்கும் வகையில் தனிநபர் வருமான வரியின் முதல் தொகுதியை, 5 இலட்சத்திலிருந்து 10 இலட்சம் வரையில் அதிகரிக்கும் முடிந்ததுள்ளது. அதனால் 150,000 ரூபாய் மாதச் சம்பளம் பெறுவோர் வரியிலிருந்து 100 வீதம் விடுவிக்கப்படுவர். 200,000 இலட்சம் சம்பளம் பெறுவோர் 75 வீதம் வரியிலிருந்து விடுவிக்கப்படும். 250,000 சம்பளம் பெறுபவரின் வரி 61 சதவீதத்தினால் விடுவிக்கப்படுவர். 300,000 சம்பளம் பெறுவோர் 47 வீதம் வரியிலிருந்து விடுவிக்கப்படுவர். 350,000 சம்பளம் பெறுவோர் 25 வீதம் வரியிலிருந்து விடுவிக்கப்படுவர். அதனால் அதிக வருமானம் பெறுவோருக்கு குறைந்த சலுகையும், குறைந்த சம்பளம் பெறுவோர் அதிக சலுகையும் கிடைக்கும் வகையில் உழைக்கும் போது செலுத்தும் வரி (PAYE) இனை குறைத்துக்கொள்ள எம்மால் முடிந்துள்ளது.

**யோகட் மற்றும் பால்சார் உற்பத்திகள் மீதான வற் வரி திருத்தம்.**

எமது பிள்ளைகளின் போஷாக்கு குறைப்பாடு தொடர்பிலான பிரச்சினை குறித்து சிறப்பு கவனம் செலுத்தியுள்ளோம். எமது நாட்டில் உற்பத்திச் செய்யப்படும் பால் சார் உற்பத்திகளின் மீதான பெறுமதி சேர் வரி (வற்) குறைக்க வேண்டும் என்ற இணக்கப்பாட்டினை எட்டியுள்ளோம்.

அதேபோல் (Withholding Tax) இனை ஐந்து சதவீத்திலிருந்து பத்து சதவீதமாக அதிகரித்துக்கொள்ள இணக்கம் எட்டப்பட்டது. முதியவர்கள், ஓய்வுபெற்றவர்கள், ஒரு தொகை பணத்தை வைப்பிலிட்டு அந்த வட்டியில் வாழ்கிறார்கள். அவ்வாறானவர்கள் மாதம் ஒன்றரை இலட்சத்துக்கும் அதிகமான வரியை பெற்றால் மட்டுமே அவர் வரி விதிப்புக்குள் உள்வாங்கப்படுவார். சாதாரணமாக ஒன்றரை இலட்சம் வருமானம் இருக்க வேண்டும். ஆனால் (Withholding Tax) வரியின் ஊடாக, ஒன்றரை இலட்சத்துக்கு குறைவான வரியை பெற்றாலும், (Withholding Tax) என்ற வகையில் பேணிச் செல்லும் இயலுமை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு உள்ளது. அதனால் இறைவரித் திணைக்களத்துக்குள் எந்தவொரு பிரஜையும் தான் குறித்ததொரு வரிக்கு உரித்தானவர் அல்லவென நினைக்கும் பட்சத்தில், மாத வருமானம் அல்லது வட்டி வருமானம் ஒன்றரை இலட்சமாக இல்லாமல் இருக்குமாயின், தனக்கு வருடமொன்றுக்கு கிடைக்கும் வருமானம் 18 இலட்சம் அல்லவென எவரேனும் நினைத்தால், அவர்கள் உள்நாட்டு வருமான வரி திணைக்களத்திற்குச் சென்று தமது வரி தொடர்பில் தகவல்களை வழங்கி வரி விதிப்பை தவிர்த்துகொள்ள முடியும்.

இதனால், ஓய்வூதியதாரர்கள் போன்ற மாதாந்தம் ஒன்றரை இலட்சம் என்ற வரி வரம்புக்கு குறைந்த வருமானத்தை ஈட்டும், 10 சதவீதத்திற்கும் குறைந்த வருமானத்திற்கு வரி செலுத்துவோரிடத்திலுருந்து (Withholding Tax) இனை அறவிடாமலிருக்கவும், குறைந்த வருமானம் காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திடம் கோரிக்கை விடுக்கும் சந்தர்ப்பம் உள்ளது. அவ்வாறானவர்களுக்கு விரைவான ஆலோசனைகளை வழங்குவதற்கான நிலையங்களை கொழும்பிலுள்ள தலைமையகத்திலும், நாடளாவிய ரீதியிலுள்ள அலுவலகங்களிலும் ஸ்தாபிக்க தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதனால் எவருக்கும் பாதிப்பு ஏற்பட இடமளியோம். அதனால் எமது வரி வலையை விஸ்தரிப்பதற்கான நோக்கமே அன்றி, குறைந்த வருமானம் ஈட்டுவோருக்கு மேலதிக (Withholding Tax) இனை விதிப்பதற்கான தேவை ஏற்படாது.

**வாகனச் சந்தையை கட்டம் கட்டமாக திறந்து விடுவது குறித்து கவனம்**

அடுத்ததாக, வாகனச் சந்தையை கட்டம் கட்டமாக திறந்து விட வேண்டும். ஏனென்றால் அதனுடன் இணைந்த தொழிற்துறையொன்றுள்ளது. அதனுடன் தொடர்புள்ள தொழில்முனைவோர் உள்ளனர். நீண்ட காலத்திற்கு வாகன சந்தையை தடுத்து வைக்க முடியாது. அதனால் 3 கட்டங்களில் இந்த வாகன சந்தையை திறந்து விட திட்டமிட்டுள்ளோம். பயணிகள் போக்குவரத்து பஸ் மற்றும் விசேட தேவைகளுக்கு பயன்படுத்தும் கார் என்பவற்றை கடந்த 14 ஆம் திகதி முதல் இறக்குமதி செய்வதற்கு ஏற்ற வகையில் திறந்து விட்டுள்ளோம். பண்டப் போக்குவரத்துக்கான கார் மற்றும் தனிப்பட்ட பயன்பாட்டுக்கான கார் என்பவற்றுக்கு அனுமதி வழங்கவும் திட்டமிட்டுள்ளோம். தனிப்பட்ட பயன்பாட்டுக்கான கார் அனுமதியை 2025 பெப்ரவரி முதல் அமுல்படுத்த இருக்கிறோம்.

**பராட்டே சட்டம் சலுகை நீடிப்பு**

இடைநிறுத்தப்பட்டுள்ள இந்த பராட்டே சட்டம் 2024 டிசம்பர் 15 ஆம் திகதி முதல் முடிவுக்கு வருகிறது. சிறுமற்றும் மத்திய தர தொழில்முனைவோர் இன்னும் வழமை நிலைக்குத் திரும்பவில்லை. எனவே அவர்களுக்கு சிறிது அவகாசம் வழங்க வேண்டும்.2024.09.31 ஆம் திகதி அளவில் செலுத்த வேண்டிய முழு கடன் 1385 பில்லியன் என கணிப்பிடப்பட்டுள்ளது. முழு கடன் பெற்றோர் எண்ணிக்கை 752,896 முழு கடன் பெற்றோர் தொகையில் 99 வீதமானோர் பெற்ற தொகை 25 மில்லியனை விடக் குறைவாகும். இது தான் புள்ளிவிபரம் கடன் பெற்றோர் 752,896 பேர் இருந்த போதும் அதில் 99 வீதமானவர்கள் 25 மில்லியனை விட குறைவாக கடனை செலுத்தாதோர்களாகும்.

அதனால் பராட்டே சட்டம் முழுமையாக இடைநிறுத்தப்பட்டிருப்பதால் வங்கிக் கட்டமைப்பிலும் நெருக்கடி ஏற்பட வாய்ப்புள்ளது. ஏனென்றால் அவர்களிடம் இருப்பதும் மக்களின் வைப்புப் பணமாகும். அது தவிர வேறு வழியில் வங்கிக் கட்டமைப்புக்கு நிதி கிடைப்பதில்லை. எனவே மக்களின் வங்கிக் கட்டமைப்பிலுள்ள நிதியின் பாதுகாப்பு தொடர்பிலும் உத்தரவாதம் வழங்க வேண்டியுள்ளது.


கடந்த காலத்தில் பல நிதி நிறுவனங்கள் வீழ்ச்சி அடைந்தன. அதன் பாதிப்பு பணிப்பாளர் சபையினரையோ வங்கித்துறையினரையோ சென்றடையவில்லை. வைப்பாளர்கள் தான் அதன் பாதிப்பை அனுபவித்தனர்.பாரியளவில் நிதி நிறுவனங்கள் வீழ்ச்சியடைந்ததில் வைப்பாளர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டனர். சிலர் தங்கள் உயிரை மாய்த்துக்கொண்டுள்ளனர். பணம் வைப்புச் செய்தோர் பெரும் வேதனையுடன் உள்ளனர்.

**பாடசாலை மாணவர்களுக்கு 6000 ரூபா கொடுப்பனவு**

பொருளாதார நெருக்கடியினால் பாரிய தாக்கம் மாணவர்களுக்கு ஏற்பட்டுள்ளது. சிலர் மேலதிக வகுப்புகளுக்குச் செல்வதை நிறுத்தியுள்ளனர். மேலதிக புத்தகங்கள் கொள்வனவு செய்வதை நிறுத்தியுள்ளனர்.தேவையான உபகரணங்கள் கொள்வனவு செய்தை நிறுத்தியுள்ளனர்.எந்த வகையிலும் இது உகந்த நிலைமையல்ல. வரவு-செலவுத்திட்டத்தில் அவர்கள் குறித்து கவனம் செலுத்தும் முன்மொழிவுகளை சமர்ப்பிக்க உள்ளதோடு இந்த வருட இறுதிக்குள் அஸ்வெசும பெறும் குடும்பங்களிலுள்ள பாடசாலை செல்லும் பிள்ளைகளுக்கு பாடசாலை புத்தகங்கள் மற்றும் உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்கு 6000 ரூபாய் கொடுப்பனவு வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அஸ்வெசும பயனாளர்கள் தெரிவு செய்கையில் சரியாக தெரிவு நடந்ததா என்ற கேள்வி கிராமங்களில் எழுப்பப்படுகிறது. அஸ்வெசும பெற தெரிவு செய்யப்படவோ பிள்ளைக்கு பாடசாலைக் கல்விக்கான கொடுப்பனவுக்கு தெரிவு செய்யப்படவோ இல்லை என்ற குற்றச்சாட்டு உள்ளது. அதனால் அஸ்வெசும திட்டத்திற்கு உள்வாங்கப்படாத ஆனால் நிவாரணம் வழங்கப்பட வேண்டிய பிள்ளைகளை தெரிவு செய்து அடுத்த பாடசாலை தவணை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னர் இந்த 6000ரூபாய் கொடுப்பனவை வழங்க நடவடிக்கை எடுப்போம்.

அந்தக் கட்டமைப்பின் ஊடாகப் பெறும் தகவல்கள், கிராம உத்தியோகஸ்தரும் சமுர்த்தி உத்தியோகஸ்தரும் அபிவிருத்தி உத்தியோகஸ்தரும் சிலவேளை சமூக சேவை உத்தியோகஸ்தரின் ஒத்துழைப்புடன் மீள ஆராய்ந்து தற்பொழுது அஸ்வெசும கிடைக்காத ஆனால் நிவாரணம் கிடைக்க வேண்டியவர்களை மீண்டும் தெரிவு செய்து அடுத்த ஏப்ரல் மாதம் முதல் அவர்களுக்கு அஸ்வெசும வழங்க நடவடிக்கை எடுப்போம் .



## வவுனியாவில் மாரடைப்பால் 45 பேர் மரணம்

இதன் பிரகாரம் 20 வயது தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவர்களில் ஒருவரும் 40 தொடக்கம் 60 வயதுக்கு உட்பட்டவர்களில் 13 பேரும் 60 தொடக்கம் 100 வயதுக்கு உட்பட்டவர்களில் 31 பேருமாக 45 பேர் இவ்வாறு மாரடைப்பால் மரணமாகியுள்ளனர்.

வவுனியாவில் மாரடைப்பால் மரணிப்போரின் எண்ணிக்கை அண்மைக்காலமாக அதிகரித்து காணப்பட்ட நிலையில் அதற்கான பல்வேறு காரணங்களும் சுகாதார திணைக்களத்தினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## "உடன்படிக்கை கைச்சாத்திடவில்லை"

இந்நிலையில் இதற்கு முன்னர் இந்தியா மற்றும் எட்கா தொடர்பில் நீங்கள் கூறியவற்றை வாபஸ் பெற்றுக்கொள்வீர்களா என்று நான் கேட்கின்றேன் என்றார். இதன்போது பதிலளித்த வெளிவிவகார அமைச்சர் விஜித ஹேரத், வலுச் சக்தி தொடர்பில் நளீன் பண்டார கேள்வியெழுப்பியமை தொடர்பில் நான் மகிழ்ச்சி எழுப்புகின்றேன். அனுரகுமாரவுக்கு மக்கள் ஆணை கிடைத்துள்ளது. ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆணை கிடைத்திருக்கவில்லை. இந்நிலையில் அன்றும் நாங்கள் இலங்கையில் வலுச் சக்தியை உற்பத்தி செய்வோம் என்றும் மேலதிக வலுச் சக்தியை பொருளாதார ஒத்துழைப்புக்குள் வெளிநாட்டுக்கு அதனை விநியோகிப்போம் என்று கூறினோம். இது நாட்டுக்கே நன்மை தரும். இதன்படி நாங்கள் வலுச் சக்தியை உற்பத்தி செய்வோம். பிம்ஸ்டெக் பொருளாதார ஒத்துழைப்புடன் எமது மேலதிக வலுச் சக்தியை ஏற்றுமதி செய்து நாட்டுக்கு வருமானத்தை தேடுவோம். இதனை விடுத்து இந்தியாவுடன் நீங்கள் கூறுவதை போன்று வேறு எந்த உடன்படிக்கையும் கைச்சாத்திடப்படவில்லை என்றார்.

## "நிருபித்தால் பதவியை துறப்பேன்"

பரீட்சைக்கு தோற்றிய விதம் தொடர்பில் உரிய அமைச்சருக்கு தெரிவித்ததாக குறிப்பிட்டுள்ளார். ஆனால் தகவலை வழங்கிய நபர் யார், எப்போது, எவ்வாறு என்ற விடயங்களை பாராளுமன்றத்துக்கு அறிவிக்க வில்லை. வெளிநாட்டில் அரசியல் அடைக்கலம் பெற்றுள்ள நபர் இந்த குற்றச்சாட்டுக்களை முன்வைத்ததாக குறிப்பிடப்படுகிறது. ஆகவே அந்த நபரை நாட்டுக்கு அழைத்து வந்து முறையான விசாரணை செய்யுங்கள் என்றார்.

இதன்போது எழுந்த அமைச்சர் வசந்த சமரசிங்க, நாமல் ராஜபக்ஷ, சட்டப் பரீட்சை எழுதிய விதம் பற்றி நான் தான் சபையில் உரையாற்றினேன். ஆகவே எனது பெயரைக் குறிப்பிட்டே அவர் உரையாற்றலாம்.நாமல் ராஜபக்ஷ சட்டப்பரீட்சை எழுதிய முறைமை தொடர்பில் குற்றச்சாட்டை முன்வைத்துள்ள நபர் காணொளி பதிவை அனுப்பி வைத்துள்ளார். வெகுவிரைவில் அவர் நாட்டுக்கு வருவார் என்றார்.

## "அரசியலிலிருந்தே நான் விலகுவேன்"

நான் சாதாரண தரப் பரீட்சையில் சித்திபெறவில்லை எனப் பல்வேறு தரப்பினரும் சமூக வலைத் தளங்கள் மூலம் மேற்கொண்டு வரும் பொய்ப் பிரசாரம் மற்றும் எனது நற்பெயருக்கு களங்கம் விளைவிக்கும் முகமாக முன்னெடுக்கப்படும் சேறுபூசும் நடவடிக்கை களுக்கும் பதிலளிகின்றேன்.

நாளுக்கு நாள் மேற்கொள்ளப்பட்டு வரும் இந்த சேறும் நடவடிக்கைகளுக்கு உரிய பதிலடியாக எனது கல்விச் சான்றிதழ்கள் சகலதையும் இன்று (18) பாராளுமன்றத்தில் முன்வைகின்றேன் ஆரம்பக் கல்வி முதல் தற்போதைய பிரதமர் கற்பிக்கும் திறந்த பல்கலைக் கழகத்தின் முதுமாணி கற்கை வரையிலான அனைத்துக் கல்விச் சான்றிதழ்களையும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிகின்றேன் . நான் கல்வி கற்ற உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்களால் வழங்கப்பட்ட அனைத்து சான்றிதழ்களையும் சகல பாராளுமன்ற உறுப்பினர்கள் அடங்களாக சகல குடிமகனாலும் பரிசீலித்துப் பார்க்க முடியும்.

நான் போலியான கல்விச் சான்றிதழ்களைச் சமர்ப்பித்தது நிரூபிக்கப்பட்டால், எனது பாராளுமன்ற உறுப்பினர் பதவி, எதிர்க்கட்சித் தலைவர் பதவி போலவே அரசியலில் இருந்தும் விலகுவேன் என்றார்.

## ஹர்ஷவிடம் COPF அரசிடம் 'கோப்'

இதேவேளை, கலாநிதி ஹர்ஷண சூரியப்பெரும, ரவிகருணாநாயக்க, ஹர்ஷன ராஜகருணா, நிமல் பலிஹேன, விஜேசிரி பஸ்நாயக்க, திலின சமரகோன், சட்டத்தரணி லக்மாலி ஹேமசந்திர ஆகியோர் அரசாங்க நிதி பற்றிய குழுவில் பணியாற்றுவதற்காக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்நிலையில், பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க, அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய (கோப்) குழுவின் தலைமைப் பதவியை சில காரணங்களுக்காக ஆளும் கட்சி வசம் வைத்திருக்க முடிவு செய்யப்பட்டுள்ளது என்றார்.

கோப் குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சிக்கு வழங்குமாறு எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவால் விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு பதிலளித்து உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு கூறினார்.

அதன்போது ஜனாதிபதி மேலும் கூறுகையில், கடந்த காலங்களில் இந்த குழுக்களின் தலைமைப் பதவி ஒரு தடவை மாத்திரமே எதிர்க்கட்சியிடம் இருந்தது.

பல சந்தர்ப்பங்களில் ஆளும் கட்சியிடமே இருந்தது. எங்களிடையே நடந்த கலந்துரையாடலின் அடிப்படையில் உங்களின் கோரிக்கை இன்றியே கோபா குழுவின் தலைமைப் பதவியை எதிர்க்கட்சி எம்.பியொருவருக்கு வழங்க தீர்மானிக்கப்பட்டது.

எனினும் கோப் குழுவின் தலைமைப் பதவியை எங்களிடம் வைத்திருக்க முடிவு செய்யப்பட்டது. இதற்காக காரணங்கள் உள்ளன என்றார்.

## அர்ச்சுனாவின்...

முதலில் யாழ் வைத்தியசாலை தொண்டர் அடிப்படையிலான ஊழியர்கள் தொடர்பில் தெளிவாக பேசிய அர்ச்சுனா பின்னர் தடம்மாறி நிலையியற்கட்டளை களுக்கும் சபைக்கு முரணாகவும் பேசத்தொடங்கினார். அப்போது சில தடவைகள் குறுக்கிட்ட சபாநாயகர்,விசேட கூற்று தொடர்பான ஆவணத்தில் என்ன இருக்கின்றதோ அதைமட்டும் பேசுமாறு வலியுறுத்திய போதும் அதை அர்ச்சுனா எம்.பி. கேட்கவில்லை.

யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் சத்தியமூர்த்தி மீது கடுமையான குற்றச்சாட்டுக்களை முன்வைத்தார்.அத்துடன், முன்னாள் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஆகியோரையும் கடுமையாக தாக்கிப்பேசினார் . இதன்போது சபாநாயகரால் அர்ச்சுனா எம்.பி.க்கு மீண்டும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இந்நிலையில் எதிர்கட்சியினரும் அரச தரப்பினரும் அர்ச்சுனா எம்.பி.யுடன் முரண்படத் தொடங்கினர். எனினும், இராமநாதன் அர்ச்சுனா எம்.பியும் கேட்பதாக இல்லை. அதனையடுத்தே, இராமநாதன் அர்ச்சுனா எம்.பியின் உரையை ஹன்சாட்டில் இருந்து நீக்குமாறு சபாநாயகர் கட்டளையிட்டார்.

## அதிகாரங்களை...

பாலங்கள் அமைப்பது மாகாண சபைக்கு உட்பட்ட விடயம் என அமைச்சர் கூறுகின்றார் .அப்படியானால் ஒருபோதும் மட்டக்களப்பில் பாலங்கள் நிர்மாணிக்கப்படமாட்டாது. ஏனெனில் மத்திய அரசாங்கம் மாகாண சபைகளுக்கு வழங்கும் நிதி அரச சேவையாளர்களுக்கு சம்பளம் வழங்குவதற்கு கூட போதாது. இதன் காரணமாகவே மாகாண சபைகளுக்கு அதிகாரங்களை நாம் கோருகிறோம் என்றார்.



வன்னியில் யானை தாக்குதலில்

# 11 பேர் பலி

வன்னியில் யானைகளின் தொல்லையால் விவசாயிகள் மிகவும் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளனர். கடந்த மாதத்தில் 11 பேர் யானை தாக்குதலில் உயிரிழந்துள்ளனர். இதனால் அங்கே யானை வேலிகளை அமைக்கும் நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும் என இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சத்தியலிங்கம் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) நடைபெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறைநிரப்பு பிரேரணை மீதான இரண்டாம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

வடக்கு, கிழக்கில் விசேட தேவையுடைய மற்றும் பெண் தலைமைத்துவ குடும்பங்கள் பொருளாதார ரீதியில் மிகவும் நலிவடைந்தவர்களாக உள்ளனர் என்றும் அவர்கள் தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தி எதிர்வரும் வரவு- செலவுத் திட்டத்தில் அவர்களுக்கான வேலைத்திட்டங்களை உள்ளடக்க வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

## “ரணில்– ராஜபக்ஷ அல்ல அனுர விக்கிரமசிங்க”



ரணில்- ராஜபக்ஷ என்று கடந்த காலங்களில் ரணில் விக்கிரமசிங்கவை குறிப்பிட்டோம். எனினும், ரணிலை விடவும் ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இந்தியாவுடன் மிக நெருக்கமாக செயற்பட்டு ரணிலின் கொள்கையை முழுமையாக அமுல்படுத்துவதால் ஜனாதிபதியை அநுர விக்கிரமசிங்க என்றே அழைக்க வேண்டியுள்ளதென ஐக்கிய மக்கள் சக்தியின் எம்.பி.யான அஜித் பி. பெரேரா தெரிவித்தார்.

பாராளுமன்ற த்தில் புதன்கிழமை (18) இடம்பெற்ற பாடசாலை மாணவர்களுக்கான காகிதாதிகளுக்கான குறை நிரப்பு பிரேரணை மீதான 2 ஆம் நாள் விவாதத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் உரையாற்றுகையில், இந்தியாவுக்கான பயணத்தை முடித்துவந்து பாராளுமன்றத்தில் உரையாற்றிய ஜனாதிபதி அனுரகுமார திசாநாயக்க இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் மற்றும் ஏற்றுக் கொண்ட இணக்கப்பாடுகள் தொடர்பில் பாராளுமன்றத்துக்கு ஏதும் அறிவிக்கவில்லை.

இலங்கை - இந்திய கூட்டு அறிக்கையில் பல்வேறு விடயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்தியாவுடன் இணக்கமாக செயற்பட வேண்டும் என்பதில் மாற்றுக்கருத்துக்கள் கிடையாது. ஆனாலும் இவ்விடயங்களில் கூடிய அவதானம் செலுத்தப்பட வேண்டும். இந்தியாவுடன் டிஜிட்டல்,மின்சக்தி மற்றும் நேரடி தொடர்புகளை மேற்கொள்வதற்கு ஜனாதிபதி இணக்கம் தெரிவித்துள்ளார்.

இந்தியாவுக்கும் இலங்கைக்கும் குழாய் முறைமை ஊடாக தொடர்புகளை பேணுவதற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது. குழாய் முறைமை ஊடாக தொடர்புகளை பேணுவதற்கு அதிக நிதி செலவிட நேரிடும். பொருளாதார நெருக்கடியில் இலங்கை சிக்குண்டுள்ள நிலையில் குழாய் முறைமைக்கு நிதி செலவு செய்வது சாத்தியமற்றது ஆகவே இதன்போது பல நிபந்தனைகளுக்கு நாடு என்ற ரீதியில் அடிபணிய நேரிடும் என்றார்.

## வித்தகர் விருது
### பெற்றார் பல்துறைக் கலைஞர்



வி.சக்தி

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் தெரிவு செய்யப்படும் விருது வழங்கும் கலைஞர்கள் மத்தியில் 2023 ஆம் ஆண்டுக்காக வித்தகர் விருது பல்துறைக் கலைஞர் மட்டக்களப்பு ஆரையம்பதியைச் சேர்ந்த கலாபூஷணம் இராசையா கிருஷ்ணபிள்ளைக்கு வழங்கிவைக்கப்பட்டது.

இதனை கிழக்கு மாகாண ஆளுநர் பேராசிரியர் ஜெயந்தலால் ரத்னசேகர, கிழக்குமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் ச.நவநீதன் ஆகியோர் இணைந்து திருகோணமலையில் கடந்த 11.12.2024 அன்று நடைபெற்ற தமிழ் இலக்கிய விழாவின் போது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

## “வட்டுவாகல் பாலம் நிர்மாணிக்கப்படும்”



வட்டுவாகல் பாலத்தை நிர்மாணிப்பதற்கு 2025 ஆம் ஆண்டு வரவு செலவுத் திட்டத்தின் ஊடாக நிதி ஒதுக்கப்படும்.மண்டூர் - குருமன்வெளி பாலத்தை நிர்மாணிப்பதற்கும் அம்பிளாந்துறை - குருக்கள்மடம் பாலத்தை அமைக்கவும் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக நெடுஞ்சாலைகள் அபிவிருத்தி அமைச்சர் பிமல் ரத்நாயக்க தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் புதன்கிழமை (18) இடம்பெற்ற வாய்மூல விடைக்கான வினா நேரத்தில் தமிழரசுக்கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட எம்.பி.யான இரா.சாணக்கியன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே இவ்வாறு தெரிவித்த அவர் மேலும் கூறுகையில்,

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரை மற்றும் எழுவான்கரை பிரதேச ங்களை இணைக்கும் பிரதான பாலமான மண்டூர் - குருமன்வெளி பாலம் நிர்மாணிப்பு மற்றும் மண்முனை தென்மேற்கு, மண்முனை தெற்கு எருவில்பற்று ஆகிய பிரதேசங்களை இணைக்கும் அம்பிளாந்துறை குருக்கள்மடம் பாலம் நிர்மாணிப்பு தொடர்பில் இலங்கை தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் முன்வைத்துள்ள கேள்விகள் போக்குவரத்து, நெடுஞ்சா லைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமான சேவைகள் அமைச்சின் விடயதானங்களுக்கு உட்பட்டதல்ல, கிழக்கு மாகாண வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு சொந்தமானது என்றார்.

## போதையுடன் சிவனடி வந்த இளைஞன் கைது

ரஞ்ஜித் ராஜபக்ஷ



ஐஸ் மற்றும் ஹெரோயினுடன் சிவனொளிபாத மலை யாத்திரைக்கு வந்த இளைஞன் ஒருவன் ஹட்டன் புகையிரத நிலையத்தில் வைத்து செவ்வாய்க்கிழமை (17) கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேகநபர், கேகாலை பிரதேசத்தை சேர்ந்த 26 வயதுடையவர் எனவும், அவர் கொழும்பு கோட்டையில் இருந்து பதுளை நோக்கி பயணித்த உடரட்ட மெனிக்கே ரயிலில், இன்னொரு குழுவுடன் வந்துள்ளதாகவும் ஹட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

மேலும் கைது செய்யப்பட்ட சந்தேக நபரை ஹட்டன் நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தவுள்ளதாகவும் இது தொடர்பான மேலதிக விசாரணைகள் மேற்கொள்ள ப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## டிரேட்டன் தீயில் வீடொன்று கருகியது

எஸ்.கணேசன்



திம்புள்ள- பத்தனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கொட்டகலை டிரேட்டன் தோட்டம் கே.ஒ பிரிவில் 10 வீடுகள் கொண்ட 6ம் இலக்க தொடர் லயன் குடியிருப்பு புதன்கிழமை (18) முற்பகல் ஏற்பட்ட திடீர் தீ விபத்தில் ஒரு வீடு தீயினால் முற்றாக எரிந்து நாசமாகியுள்ளதுடன், ஏனைய மூன்று வீடுகள் பகுதியளவில் சேதமாகியுள்ளன.

இந்த நான்கு வீடுகளிலும் இருந்த 22 பேர் உறவினர்கள் வீடுகளில் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தீ ஏற்பட்ட போது வீட்டில் இருந்தவர்கள் எரிவதை கண்டு கூச்சலிட்டதாகவும், அதன் பிறகு அயலவர்கள் ஓடி வந்து ஏனைய வீடுகளுக்கு தீ பரவாமல் தீயை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்துள்ளனர்.

குறித்த வீட்டில் இருந்த பெருமளவிலான வீட்டு உபகரணங்கள், பெறுமதியான ஆவணங்கள், தங்க நகைகள், உடு துணிகள் மற்றும் பாடப் புத்தகங்கள் என பெருமளவிலான பொருட்கள் தீக்கிரையாகியுள்ளன.

பாதிக்கப்பட்டவர்களுக்கான நிவாரண உதவிகளை தோட்ட நிர்வாகத்தின் ஊடாக வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்ப ட்டுள்ளன. கின்றது. இத்தீக்கான காரணம் இதுவரை உறுதி செய்யப்படவில்லை.

ஸ்தலத்துக்கு விரைந்த பொலிஸார். தீ பரவியமைக்கான காரணங்களை கண்டறிய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## சிறுமியை வன்புணர்ந்த முகநூல் காதலன்

முகநூல் ஊடாக அறிந்துக்கொண்ட சிறுமியை (17 வயது) பாலியல் பலாத்காரம் செய்த இளைஞனை பொலிஸார் செவ்வாய்க்கிழமை (17) கைது செய்துள்ளனர்.

இந்த சிறுமி படல்கும்புரை பிரதேசத்தை சேர்ந்த இளைஞனை (19 வயது) கடந்த ஒரு மாதத்திற்கு முன்னர் முகநூல் ஊடாக அறிந்துக்கொண்டு அவருடன் காதல் உறவில் ஈடுபட்டுள்ளார்.

குறித்த சிறுமி தனது நண்பியின் வீட்டிற்கு சென்ற நிலையில் காதலனையும் சந்தித்துள்ளார். பின்னர், அவ்விளைஞன், சிறுமியை வீட்டில் விடுவதாக கூறி முச்சக்கர வண்டியில் ஏற்றிச் சென்று, புத்தல வீதியில் உள்ள தேக்குமரக்காட்டுக்கு அருகில் முச்சக்கர வண்டியை நிறுத்தி வலுக்கட்டாயமாக சிறுமியை பாலியல் வன்புணர்வுக்கு உட்படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட சிறுமி, தனக்கு நேர்ந்ததை பெற்றோரிடம் தெரிவித்ததையடுத்து இளைஞன் கைது செய்யப்பட்டார்.








## சைகை மொழியை அரச மொழியாக்குக

யது பாஸ்கரன்

கிளிநொச்சியில் சைகை மொழியை அரச மொழியாக அனைத்து இடங்களிலும் பயன்படுத்த வலியுறுத்தி கவனயீர்ப்பு பேரணியும் விழிப்புணர்வு கூட்டமும் புதன்கிழமை (18) முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையில், சைகை மொழி பேசுபவர்கள் 5000க்கும் மேற்பட்டோர் இருக்கின்ற போதும் அந்த மொழி அங்கீகரிக்கப்படாது அவர்கள் அரச திணைக்களங்களிலும் ஏனைய இடங்களிலும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதில் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றது.

சைகை மொழியை அங்கீகரிக்க கோரி கிளிநொச்சி நகர விளையாட்டு மைதான முன்றலில் இருந்து குறித்த விழிப்புணர்வு பேரணி பசுமை பூங்காவளாகம் வரை சென்றடைந்து பசுமை பூங்கா வளாகத்தில் விழிப்புணர்வு கூட்டம் நடைபெற்றது

இதில் முதன்மை விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நாகலிங்கம் வேதநாயகன் கலந்து கொண்டார். தொடர்ந்து ஜனாதிபதிக்கான மகஜரும் கையளிக்கட்டதுடன் மேலும், இலங்கையின் அனைத்து மாவட்டங்களையும் சேர்ந்த சைகை மொழி பேசுபவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.







# மாரடைப்பு பற்றிய உணர்வு மரண உத்தரவு போன்றது

இதய நோய் மற்றும் இதய செயலிழப்பு பற்றி தொடர்ந்து பேசுகிறோம். எனினும், இதய நோய்களால் இன்றும் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர், உலகில் அதிக எண்ணிக்கையிலான இறப்புகள் இதய நோய்களால் ஏற்படுகின்றன. எனவே, மாரடைப்பு பற்றி நமக்கு ஏற்படும் உணர்வு மரண உத்தரவு போன்றது.

வவுனியாவில் மட்டும், கடந்த பத்து மாதங்களில் 45 பேர் மாரடைப்பால் மரணம் அடைந்துள்ளனர். அதில், 20 வயது தொடக்கம் 40 வயதுக்கு உட்பட்டவர்களில் ஒருவரும், 40 தொடக்கம் 60 வயதுக்கு உட்பட்டவர்களில் 13 பேரும், 60 தொடக்கம் 100 வயதுக்கு உட்பட்டவர்களில் 31 என, 45 பேர் மரணமடைந்துள்ளனர்.

இதயம் நம் வாழ்வில் மிகமுக்கியமான உறுப்பு. நமது உடல் உறுப்புகளின் செயல்பாட்டிற்கு தேவையான ஆக்ஸிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்களின் போக்குவரத்து இதயத்தால் செய்யப்படுகிறது. இதயத்தின் ஆரோக்கியம் இழக்கப்படும் போது, உடல் உறுப்புகளின் செயல்பாட்டிற்கு தேவையான ஆக்ஸிஜன் மற்றும் ஊட்டச்சத்துக்களை கொண்டு செல்ல முடியாது.

இதயத்தின் எந்தப் பகுதியில் நோய் ஏற்பட்டாலும் அதை இதய நோய் என்று சொல்லலாம். இதற்கிடையில், இதயத்தின் இரத்த நாளங்களில் அடைப்பு ஏற்படுவதால் ஏற்படும் மருத்துவ நிலை மாரடைப்பு என்று அழைக்கப்படுகிறது.

வலது பக்கத்திற்கு இரத்தத்தை வழங்கும் இரண்டு பாத்திரங்கள் (கரோனரி தமனிகள்) மற்றும் இடது பக்கத்திற்கு இரத்தத்தை வழங்கும் இரண்டு பாத்திரங்கள் உள்ளன. இந்த இரத்த நாளங்களில் கொலஸ்ட்ரால் போன்ற கூறுகள் படிவதால், இதயத்திற்கு இரத்த ஓட்டம் குறைகிறது.

இதயத்தில் உள்ள இரத்த நாளங்களின் அடைப்பு காலப்போக்கில் மெதுவாக உருவாகிறது மற்றும் இதய தசைக்கு இரத்த விநியோகத்தை குறைக்கிறது. ரத்தம் சப்ளை குறையும் போது,நெஞ்சுவலி, மூச்சு விடுவதில் சிரமம் போன்ற அறிகுறிகள் தென்படலாம். அல்லது படிக்கட்டுகளில் ஏறினால், நெஞ்சு வலி ஏற்படும்.

நோயாளிக்கு கடுமையான மார்பு வலி ஏற்படுகிறது. இதற்கு விரைவில் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால், இதயத்துக்கு ரத்தம் வழங்கப்படாவிட்டால், நோயாளியின் உயிரை கூட இழக்க நேரிடும். சில நேரங்களில் உயிர் காப்பாற்றப்பட்டாலும், அந்த நபரின் பல்வேறு சிக்கல்களால், வாழ்க்கைத் தரம் தடைபடலாம்.

புகைபிடித்தல், இரத்த கொலஸ்ட்ரால் அளவு,இரத்த சர்க்கரை, உயர் இரத்த அழுத்தம், உணவு முறை (அதிக உப்பு மற்றும் எண்ணெய்), உடற்பயிற்சி இல்லாமை, உடல் பருமன், மரபணு தாக்கம் உள்ளிட்டவற்றை குறிப்பிடலாம்.

மேலே குறிப்பிடப்பட்டவையே மாரடைப்பு ஏற்படுவதற்கான பிரதான காரணமாக அமைகின்றன. ஆகையால், உடற்பயிற்சியை மேற்கொண்டு, உணவு முறையில் மாற்றத்தை ஏற்படுத்தினால், மாரடைப்பை வராமல் தற்காத்துக்கொள்ள முடியும். இல்லையேல் அதனை தவிர்க்க முடியாது.

மாரடைப்பு ஒரு அவசர நிலை என்று கருதப்படுகிறது. எனவே, விரைவான மற்றும் அவசர சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். மாரடைப்பு ஏற்பட்டு காப்பாற்றப்பட்டவர்களை தனித்துவிட்டுவிடவேண்டாம். அவ்வாறானவர்கள் மன அழுத்தங்கள் ஏற்படும் வகையிலான சம்பவங்களை பார்க்காமல் விடுவது சிறந்தது. ஆகையால், மாரடைப்பு பற்றிய மரண உணர்வில் இருந்து தங்களை தாங்களே பாதுகாத்துக்கொள்ள வேண்டும்.


## தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk

தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருத்துக்களையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.



அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk


# 'பட்டம்' படுத்தும் பாடு

**மொஹமட் பாதுஷா**

அடுத்தடுத்து இரண்டு தேர்தல்களில் வெற்றி பெற்றது மட்டுமன்றி, மக்களது நம்பிக்கையையும் பெற்றிருந்த அனுர குமார திசாநாயக்க தலைமையிலான தே.ம.ச அரசாங்கமானது, நினைத்துப் பார்த்திராத சர்ச்சைகளுக்குள்ளும் சவால்களுக்குள்ளும் சிக்கிக் கொண்டுள்ளது,

பொருட்களிற்கான தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் ஒருபுறம் மக்கள் மத்தியில் சலசலப்பை ஏற்படுத்திக் கொண்டிருக்க, அரசியல் பிரதிநிதிகளின் பட்டங்கள் மற்றும் பட்டடிப்பின் படிப்புக்கான கல்வித் தகைமைகள் இப்போது பெரும் சர்ச்சைகளை ஏற்படுத்திக் கொண்டிருக்கின்றன.

என்ன சொல்லியும் நியாயப்படுத்த முடியாத ஒரு சூழலில் கிட்டத்தட்ட முழு என்.பி.பி. அரசாங்கமுமே தலைகுனிவைச் சந்திக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

இதனை விதி என்று சொல்வதை விட தேர்தல் காலத்தில் வெளிப்படுத்தப்பட்ட அதிமேதாவித்தனத்தின் விளைவு என்றே கூறலாம்.

முட்டை விலை அதிகரிப்புத்தான் முதலில் ஒரு சிக்கலாக உருவெடுத்தது. பிறகு அரிசி தட்டுப்பாடு, தேங்காய் விலை அதிகரிப்பு என பல பொருட்களுக்கு சந்தையில் தட்டுப்பாடும் விலை அதிகரிப்பும் ஏற்பட்டு, அரசாங்கத்தின் ஆற்றலை உரசிப் பார்த்தது.

எந்த அரசாங்கம் பதவிக்கு வந்திருந்தாலும் பிரச்சினைகள், சவால்கள் வந்திருக்கும். இவற்றுள் நடைமுறையில் இயற்கையாக எழுகின்ற சவால்களும் உள்ளன.

அரசியல் மற்றும் வியாபார மாபியாக்களினால் திட்டமிட்டு செயற்கையாக உருவாக்கப்படுகின்ற பொருட் சந்தை நெருக்கடிகளும் உள்ளன.

ஆயினும் சாதாரண மக்கள், சந்தைக் காரணிகளைப் பற்றி பெரிதாக கவனத்தில் எடுக்கவில்லை.

அவர்களது எதிர்பார்ப்பு எல்லாம் ஜனாதிபதி அனுர மற்றும் அக்கட்சியின் வேட்பாளர்கள் கூறியவாறு விலைக் குறைப்புக்கான வாக்குறுதிகளை நிறைவேற்ற வேண்டும் என்பதே ஆகும்.

ஆனால், நடைமுறை யதார்த்தங்கள் வேறுமாதிரியாக இருக்கின்றன. தேர்தல் மேடைகளில் எதனை வேண்டும் என்றாலும் கூறலாம். அதிகாரக் கதிரையில் அமர்ந்த பிறகுதான், வாக்குறுதிகளை நிறைவேற்றுவதில் இருக்கின்ற நடைமுறைச் சிக்கல்களை எந்தவொரு அரசாங்கமும் கண்டு கொள்ளும். அந்த நிலையிலேயே இப்போது அனுர அரசாங்கம் உள்ளது.

விலைத்தளம்பல்கள், பொருட் தட்டுப்பாடுகள் வழக்கமானவையே. ஆனால், வரலாற்றில் எந்தவொரு அரசாங்கமும் எதிர்கொண்டிராத 'கல்வித் தகைமைசார்' நெருக்கடிகளையும் சிக்கல்களையும் புதிய அரசாங்கம் எதிர்கொண்டுள்ளது.

அரசியல் அரங்கில் இது பெரும் தலைகுனிவையும், சீரழிவையும் ஏற்படுத்தியிருக்கின்றது.

சபாநாயகர் அசோக ரண்வலவின் கலாநிதிப் பட்டம் தொடர்பிலேயே ஆரம்பத்தில் சர்ச்சைகள் ஏற்பட்டது. முன்னாள் தேர்தல்கள் ஆணையாளர் மற்றும் பல்கலைக்கழக விரிவுரையாளர் ஆகியோர் சபாநாயகரின் கலாநிதிப் பட்டத்தின் உண்மைத்தன்மையை உறுதிப்படுத்துமாறு பகிரங்கமாகவே கோரினர்.

முதலில் தனது கலாநிதிப் பட்டம் உண்மையானது என்று அசோக ரண்வல கூறியிருந்தாலும் அதனை அவர் ஆதாரபூர்வமாக நிரூபிக்கவில்லை. பாராளுமன்ற இணையத்தளத்தில் இருந்து அவரது பெயருக்கு முன்னால் காணப்பட்ட 'டொக்டர்' என்ற பட்டம் நீக்கப்பட்டது. இது, தவறு நடந்திருப்பதை மறைமுகமாக ஒத்துக் கொள்வதாகவே கருதப்பட்டது.

உண்மையில் தனக்கு செல்லுபடியாகும் கலாநிதிப் பட்டம் இருக்கின்றது என்றால் அதற்கான சான்றிதழை அசோக ரண்வல பகிரங்கமாக சமர்ப்பித்திருக்க வேண்டும். அப்படிச் செய்திருந்தால், அவர் மீது மட்டுமன்றி என்.பி.பி. அரசாங்கம் மீதும் இந்தக் கறை படியாமல் தடுத்திருக்கலாம்.

தே.ம.ச அரசாங்கம் எல்லாவற்றிலும் மாற்றத்தைக் கொண்டு வருவதாக கூறியே இரண்டு தேர்தல்களிலும் வரலாற்று வெற்றியைப் பெற்றது. உண்மையில் ஜனாதிபதி உள்ளிட்டோர் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக இரவும்பகலும் உழைத்துக் கொண்டிருந்தாலும், பட்டம் தொடர்பான விவகாரம் தேவைற்ற ஒரு தடங்கலை ஏற்படுத்தியிருக்கின்றது.

புதிய முகங்களை மட்டுமன்றி, நன்கு படித்தவர்களையும் களமிறக்கியுள்ளதாக என்.பி.பி. கூறியது. இவர்களது வைத்திய கலாநிதி, முதுமாணி, துறைசார் கலாநிதி, பட்டப் படிப்புகள் பெரும்பாலும் ஒரு பிரசார ஆயுதமாக பயன்படுத்தப்பட்டன. அது முற்றாக தவறு என்றும் கூற முடியாது.

பல வைத்தியர்கள், கலாநிதிகள், துறைசார் வல்லுனர்களும் என்.பி.பி. ஊடாக இந்த முறை பாராளுமன்றத்திற்கு வந்திருக்கின்றார்கள். ஆனால், இந்த பட்டச் சர்ச்சைகளையடுத்து, இவர்களில் யார் யாருடைய பட்டங்கள் உண்மை என்ற சந்தேகம் இப்போது மக்களுக்கு ஏற்பட்டிருக்கின்றது.

சபாநாயகர் இராஜினாமாச் செய்தது ஒருபுறமிருக்க மேலும் பலரது பட்டங்களும் போலியானவை என்ற கருத்துக்கள் முன்வைக்கப்படுகின்றன. பாராளுமன்ற இணையத்தள தரவுப் பதிவேற்றத்தில் ஓரிருவரது தரவுகளை உட்சேர்க்கும்போது தவறு இடம்பெற்றதாகவும் ஒரு கதை கூறப்படுகின்றது. அது உண்மையென்றாலும், அது ஓரிருவக்கே நடந்திருக்கலாம்.

உண்மையாக பட்டம் பெற்றவர்கள் மட்டுமன்றி போலி கலாநிதிகளும் தேர்தல் காலங்களில் தங்களை பொறியியலாளர் என்றும், வைத்திய நிபுணர் என்றும், பட்டதாரி என்றும், முதுமாணி மற்றும் கலாநிதி என்றும் கூறிப் பிரசாரம் செய்தனர்.

இந்தப் பின்னணியில்தான் அமைச்சர் கருணாதிலக, கோசல ஜயவீர, தனுர, றிஸ்வி சாலி என இந்தப் பட்டியல் இப்போது சமூக வலைத்தளங்களில் நீளத் தொடங்கியுள்ளது. பல போலிப் பட்டதாரிகள், கலாநிதிகள் அவர்களாகவே தமது பெயர்களுக்கு முன்னால் இருந்த பட்டங்களை நீக்கியுள்ளனர்.

ஏன் நமக்கு இந்த வம்பு என்று அவர்கள் நினைத்திருக்கலாம். ஆனால் பட்டத்தை, தகைமையைச் சொல்லி மக்களை ஏமாற்றியது யாராக இருந்தாலும் அது மன்னிக்க முடியாத மோசடியாகும்.

பாராளுமன்றத்தில் இதற்கு முன்னர் சண்டியர்கள், சட்டவிரோத வியாபாரிகள், குற்றமிழைத்தவர்களும் எம்.பி.யாக இருந்திருக்கின்றார்கள். ஒரு குறிப்பிட்ட காலத்தில் 94 பேர் சாதாரண தரம் சித்தியடையாதவர்களாகவும் 100 இற்கு மேற்பட்டோர் உயர்தரம் சித்தியடையாத எம்.பி.க்களாகவும் இருந்தனர். அதேபோல் கடந்தகாலத்தில் மஹிந்த ராஜபக்ச போன்றோருக்கு கௌரவ கலாநிதி பட்டங்கள் வழங்கப்பட்டமை, நாமல் பட்டம் பெற்றமை முதல் பல விடயங்கள் பேசப்படுகின்றன. ஆனால், அவர்கள் தாம் கலாநிதிகள் என்று பிரசாரம் செய்த ஞாபகம் இல்லை.

மறுபுறத்தில், எம்.பி.யாகவோ சபாநாயகராகவோ வருவதற்கு கலாநிதிப் பட்டம் கட்டாயமும் இல்லை. இந்த நிலைமையில், அதனைப் போலியாக காண்பித்து மக்கள் ஆணையைப் பெற்றமை எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ள முடியாததாகும்.

வெளிநாட்டில் பணத்தைச் செலுத்தி குறுகிய காலத்தில் இளமானி பட்டத்தை மட்டுமன்றி கலாநிதி பட்டத்தையும் பெறக் கூடிய வசதியும் உள்ளது.

மிக சிரமப்பட்டு கற்று முடிக்க வேண்டிய கற்கையை பணத்திற்காக விற்பனை செய்கின்ற மாபியாவுக்கு அரச அங்கீகார தரப்புக்களும் ஒத்துழைப்பு வழங்குகின்றன.

இதற்கெல்லாம் முடிவுகட்டி, மாற்றத்தைக் கொண்டு வரப் போவதாக கூறியவர்களே தமது தகைமைகளை தமக்கு விரும்பியது போல மாற்றியமைத்திருக்கின்றார்கள் என்பதையும், அதனை என்.பி.பி. கட்சியோ தேர்தல்கள் ஆணைக்குழுவோ, பாராளுமன்ற அலுவலகமோ சரிபார்த்து உறுதிப்படுத்தவில்லை என்பதையும் நாட்டு மக்களால் ஜீரணிக்கவே முடியவில்லை.

இலங்கையில் கிட்டத்தட்ட 40 ஆயிரம் போலி மருத்துவர்கள் இருப்பதாகக் கூறப்படுகின்றது. வைத்திய துறையிலேயே இந்த நிலைமை என்றால் பொறியியல், கனிய அளவையியல் (கியு.எஸ்), இளமானிப் பட்டம், டிப்ளோமா மற்றும் என்.வி.கியு. என ஏனைய துறைகளில் எத்தனையாயிரம் போலி சான்றிதழ்கள் உலவுகின்றன என்பதை கணக்கிடவே முடியாது.

இது மக்கள் ஆணையோடும், ஜனநாயகத்தோடும் விளையாடுகின்ற செயலாகும்.

ஆட்சி அதிகாரத்தையும், எம்.பி. பதவியையும் பெறுவதற்காக தாம் கல்வித் தகைமையில் உயர்ந்தவர்கள் என்றும் கலாநிதிகள், பொறியியலாளர்கள், வைத்தியர்கள், பட்டதாரிகள் என்றும் அதனால் தமக்கு அறிவும் ஆற்றலும் அதிகமிருப்பதாகவும் மக்களை நம்பவைத்து ஏமாற்றிய குற்றத்திற்கு, பாராளுமன்றத்தை சுத்தப்படுத்துவதாகக் கூறிய தே.ம.சக்தி அரசாங்கம் எவ்வாறு பரிகாரம் தேடப் போகின்றது என்றுதான் மக்கள் ஆவலுடன் காத்துக் கொண்டிருக்கின்றனர்.

ஜே.வி.பி. கட்சியை நம்பியும் பெரும்பான்மை மற்றும் சிறுபான்மை மக்கள் இந்தளவுக்கு வாக்களிக்கவில்லை.

இந்த நாட்டு மக்கள் பிரதானமாக நம்பியது, ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவையேதான் என்பதை நினைவிற் கொள்ள வேண்டும்.

ஜனாதிபதிக்கு இதில் பாரிய பொறுப்புள்ளது. போலி பட்டங்களை பயன்படுத்திய ஆளும், எதிர்க்கட்சி எம்.பி.க்கள் அனைவரும் பதவி விலகுவதுடன், அவ்வாறான பட்டங்களைப் பிரசாரம் செய்து தேர்தலில் தோல்வியடைந்த வேட்பாளர்களும் மக்களை ஏமாற்றிய குற்றத்திற்காக சட்டத்தின்படி தண்டிக்கப்பட வேண்டும். அப்படி செய்தால் ஜனாதிபதி அனுர குமார திசாநாயக்கவாவது தன்மீது மக்கள் வைத்துள்ள நம்பிக்கையை கொஞ்சமாவது காப்பாற்றிக் கொள்ளலாம். இந்தக் கறையை கொஞ்சம் கழுவலாம். இல்லாவிட்டால் பட்டப் பிரச்சினை பதவிகளை மட்டுமல்ல, எதிர்காலத்தில் ஆட்சியையும் ஆட்டக் காணச் செய்யலாம்.



## வாழ்வியல் தரிசனம்

பிரபஞ்சம் முழுமையாகப் பிரகாசிக்க, ஒவ்வொருவரின் உள்ளத்திலும் முழு உலகையும் அரவணைக்கும் அன்பு எனும் ஒளியைப் பாச்ச முயற்சி செய்க! இது கடினமானது இல்லை.

புன்னகை செய்து, விழிகள் மூலம் கருணையுடன் நோக்குக! எதிகளே இல்லாத நிலையில் வாழ்ந்திட முயலுங்கள்.

இயன்றளவு சாதாரண உதவிகளை பிறருக்குச் செய்யத் தயங்க வேண்டாம். எக்காரணம் கொண்டும், சூடான சொற்பதங்களைப் பிரயோகிக்க வேண்டாம்.

தமக்குப் பிடிக்காததை, மற்றொருவருக்குக் கொடுப்பது, நாகரிகமானது அல்ல! தானம் செய்யும்போது கூட, கழித்துவிடும் பொருட்களை வழங்கலாகாது.

பசித்தோருக்கு இயன்றவரை வழங்குவது மேலானது. உடலுக்கு உணவு வழங்குதல், ஒருவரின் ஆன்மாவுக்கே ஆறுதல் அளிப்பது போலாகும்.

எவரையும் நிராகரிக்க வேண்டாம். எல்லோரும் எமக்கு வேண்டப்பட்டவர்கள். யாவரும் செய்யும் சிறு கொடைகள், முழு உலகையும் உயர்த்தும்.

பருத்தியூர் பால. வயிரவநாதன்

## கடிதங்கள்

### போக்குவரத்து சிரமம் 06] பாறுக் ஷிஹான்



கல்முனை மாநகர சபைக்குட்பட்ட பகுதிகளான நற்பிட்டிமுனை பெரிய நீலாவணை மருதமுனை பாண்டிருப்பு சாய்ந்தமருது மற்றும் நகரப்பகுதிகளில் அதிகளவான கட்டாக்காலி மாடுகள் மற்றும் நாய்கள் காணப்படுவதாக மக்கள் தெரிவிக்கின்றனர்.

இதன் காரணமாக போக்குவரத்தில் ஈடுபடும் பொதுமக்கள் வாகன சாரதிகள் பல்வேறு சிரமங்களை எதிர் கொள்வதாக சுட்டிக்காட்டுகின்றனர்.

இது தொடர்பில் உரிய அதிகாரிகள் கவனமெடுத்து நடவடிக்கைகளை எடுக்கவில்லை என பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர். கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு முன்னுள்ள வீதியில் நாய்கள் நடமாடுவதோடு பல நாய்கள் பொலிஸ் நிலையம் வாசலில் வீதியில் படுத்துறங்குகின்றன.

எனவே சமூகநலன் கருதி மாநகர சபை மற்றும் பிராந்திய சுகாதார பரிசோ தகர்கள் உள்ளிட்டோர் ஒன்றிணைந்து உரிய நடவடிக்கை மேற்கொள்ள வேண்டுமென கோரிக்கை விடுக்கப்படுகின்றது.

பாறுக் ஷிஹான்

## செயற்கை நுண்ணறிவு தொழிநுட்பம்: நகைச்சுவை பார்வை

# கணினியின் காமெடி...



அப்துல் அஸீஸ் அஸ்மா

செயற்கை நுண்ணறிவு (AI) நம் காலத்தின் மிகச் சிறந்த கண்டுபிடிப்பாக இருந்தாலும், இதை நகைச்சுவையுடன் பார்த்தால், அது சின்ன சிரிப்புகளைத் தவிர்க்க முடியாதவாறு நிறைய நகைச்சுவை தருகிறது. கணினிகள் மிகவும் புத்திசாலிகள் ஆகிவிட்டன என்றாலும், அவற்றில் ஒரே நேரத்தில் சாப்பிட்டு, பேசி, வீடியோ பார்ப்பதற்கான திறமை இன்னும் இல்லையே என்பதை கவனித்தீர்களா? அதற்கான திறமை மனிதர்களுக்கு மட்டுமே!

AI-யின் முக்கிய அம்சமானது "கணக்கிடும் திறன்". இதற்குப் பெரிய சிக்கல்கள் இல்லை என்பதற்காகவே தற்கொலைக் கவிதைகள் எழுத முடியுமா என்ன? அதிலும், "கணினியை ஓர் நல்ல நண்பனாக்குங்கள்" என்று சிலர் கூறுகிறார்கள். உண்மையில், அதற்கு நீங்கள் தரவுகளைப் பாம்பு போல எடுத்து தர வேண்டும். இல்லை என்றால், அது மின்னலாகவும், விரைந்து முடிந்துவிடும்.

அதற்கு பல உண்மைகளும் உள்ளன. உதாரணமாக, சில நேரங்களில் Google Assistant உங்கள் பேச்சை கேட்டு, நீங்கள் கேட்ட கேள்வியைச் சரியாக புரிந்துகொள்ளாமலே "இது உங்களுக்குப் பயனுள்ளதாக இருந்ததா?" என்று கேட்கும். உண்மையில், இது ஒருவிதமான நகைச்சுவையான அணுகுமுறையல்லவா?

அனைத்து துறைகளிலும், AI தன்னைப் பொருத்தி கொள்ள முயல்கிறது. ஆனால் அது எப்போதாவது மனிதர்களை மிஞ்சும் என்ற கனவுகள் எல்லாம் இன்னும் சாத்தியமாகவில்லை. Alexa போலவே, அது என்னால் உண்மையில் ஒரு பன்னீர் பரோட்டா சமைக்க முடியாது!

செயற்கை நுண்ணறிவு மிகுந்த அறிவு கொண்டது என்பதில் ஐயமில்லை, ஆனால் நம்மால் தோன்றும் சிரிப்பைத் தடுக்க முடியாது. AI யின் உலகில், நகைச்சுவைக்கு நிறைய இடம் உள்ளது!

செயற்கை நுண்ணறிவு (AI) தொழிநுட்பம் பற்றிய நகைச்சுவை சித்திரிப்புக்கான குறிப்புகள்

### நகைச்சுவை உத்திகள்:

- உணர்வற்ற AI:

AI யின் வேலைகள் அனைத்தும் அறிவியல் மற்றும் தரவுகளின் அடிப்படையில் இருக்கும். ஆனால் உணர்வுகளைப் பொறுத்தவரை, அது எப்போதும் வெறுமையாகவே இருக்கும். உதாரணமாக, Siri அல்லது Alexa சோகம் அல்லது மகிழ்ச்சியை உணராமல், ஒரே மழுங்கிய குரலில் பதிலளிக்கின்றன.

- தவறான மொழிபெயர்ப்பு:

Google Translate போன்ற AI மெய்ப்பொருள் வடிவமைப்புகளை பயன்படுத்தினால், சில நேரங்களில் வெகுஜன சிரிப்புகளை உருவாக்கும் வகையில் மொழிபெயர்ப்புகள் மாறலாம். இது நகைச்சுவைக்கு மிகுந்த இடத்தை உருவாக்குகிறது.

- தானியங்கி பதில்கள்:

AI அடிப்படையில் பதிலளிக்கும் உதவியாளர்கள், ஒரே மாதிரியான, நிஜத்தில் பொருத்தமற்ற பதில்களைத் தருவதை பார்க்கையில் ஒரு வகை சிரிப்பு உண்டாகும். உதாரணமாக, "நான் கடினமாக உழைக்கிறேன்" என்ற வார்த்தை, சாதாரண பணிகள் முன்னேற்றமின்றி நிற்கும்போது, எவ்வளவு நகைச்சுவையுடன் இருக்கும்!

### மனிதர்களை புரிந்துகொள்ளும் திறன் குறைவு:

- நிர்வகிக்க முடியாத கேள்விகள்:

சில கேள்விகளுக்கு AI பதிலளிக்காமல் தவிர்க்கிறது அல்லது தவறான பதில்களைத் தருகிறது. உதாரணமாக, "குட்டி விலங்குகள் ஏன் இவ்வளவு அழகாக உள்ளன?" என்ற கேள்விக்கு, AI பயனுள்ள பதில் அளிக்கவில்லை. இதுபோன்ற எளிய கேள்விகளால் அவற்றின் குறைகளை எளிதில் நகைச்சுவையாக பார்க்க முடியும்.

- பதில்கள் மற்றும் கேள்விகளில் உள்ள சிக்கல்கள்:

Chatbots சில சமயம் கேள்விகளுக்கு மாறுபட்ட பதில்களை அளிக்கலாம். எடுத்துக்காட்டாக, "நான் இன்று என்ன சாப்பிடலாம்?" என்று கேட்கும் போது, "நான் என்னுடைய உணவுப்பட்டியலைத் தெரிந்து கொள்ளவில்லை" என்று பதில் வரும் போது சிரிப்பைத் தடுக்க முடியாது.

### AI யின் செயல்பாடுகள் மற்றும் சிரிப்புகள்:

- தவறான முகஅமைப்புகள்:

**தானியக்கமயமாக்கல் என்பது நம் வாழ்க்கையை எளிமையாக்கும், ஆனால் சில சமயங்களில் அது நகைச்சுவைக்கான ஒரு கதாநாயகியாக மாறுகிறது. AI "நினைவுகள்" அல்லது உணர்வுகளை உண்மையிலேயே பகிர்ந்து கொள்ள முடியாது.**

AI-யின் ஒரு புதிய உருவாக்கம், தன்னிடம் உள்ள தரவுகளை அடிப்படையாகக் கொண்டு கற்பனை செய்து உருவாக்கப்பட்ட உருவங்களில், சில முறை முக அமைப்புகள் மிகவும் நகைச்சுவையானதாக இருக்கலாம். ஒரு கணினி உங்கள் முகத்தை கண்டுபிடிக்க முயற்சி செய்யும் போது, அது படத்தில் காண்பிக்கும் உருவம் மக்களை சிரிக்க வைக்கும்.

- தானியக்கமயமாக்கலின் சிரிப்புகள்:

தானியக்கமயமாக்கல் என்பது நம் வாழ்க்கையை எளிமையாக்கும், ஆனால் சில சமயங்களில் அது நகைச்சுவைக்கான ஒரு கதாநாயகியாக மாறுகிறது. உதாரணமாக, ஆபீஸில் ஒரு காபி இயந்திரம் தானாகவே செயல்படாமல் நின்று, உங்கள் காலை உணவை திருப்பித் தராதபோது நகைச்சுவையை ஏற்படுத்தும்.

தனிப்பட்ட அனுபவங்களில் AI:

- AI ஹாலிவுட் கற்பனைகள்:

AI பற்றி நாம் பெரும்பாலும் படங்களில் காணும் கற்பனைகள் நகைச்சுவையுடனும் இருக்கின்றன. உதாரணமாக, AI யின் விரைவான வளர்ச்சி மற்றும் வரவிருக்கும் "robot overlords" பற்றிய சதிகள் நகைச்சுவையான அளவுக்கு மிகுந்த பரபரப்பை ஏற்படுத்துகின்றன.

### AI யின் எதிர்காலம்:

- முதலாளி AI?:

ஒரு நாள் AI யே எங்கள் மேல் மேலாளராக இருப்பதாக மனிதர்கள் நகைச்சுவையுடன் கற்பனை செய்கிறார்கள். ஆனால் உண்மையில், ஒரு கணினி உங்கள் விடுமுறையை ஒப்புக்கொள்வதை கற்பனை செய்தால், அது நகைச்சுவையைத் தாண்டி அச்சத்தையும் தரும்.

- நெருங்கிய உறவுகள்:

சிலர் AI உதவியாளர்களுடன் உண்மையிலேயே நெருக்கமான தொடர்புகளை உருவாக்க முயற்சிக்கின்றனர். ஆனால் உண்மையில், அந்த வேலைகள் சிரிப்புகளை உண்டாக்கும், ஏனெனில் AI "நினைவுகள்" அல்லது உணர்வுகளை உண்மையிலேயே பகிர்ந்து கொள்ள முடியாது.

### மோசமான மொழிபெயர்ப்புகள்**:

- Google Translate சிரிப்புகள்:

இன்றைய AI பயன்களுள், மொழிபெயர்ப்பு ஒரு முக்கிய பகுதி. ஆனால் சில முறை மொழிபெயர்ப்புகள் நகைச்சுவைக்கு வழிவகுக்கின்றன. எடுத்துக்காட்டாக, ஆங்கிலத்தில் "The spirit is willing, but the flesh is weak" என்ற வார்த்தை, ரஷியன் மொழியில் Google Translate மூலம் மொழிபெயர்த்தால், "The vodka is good, but the meat is rotten" என்ற கேலிக்கூத்தான விளக்கமாக மாறியிருந்தது.

### AI உதவியாளர்கள்:

Siri-யின் முடிவற்ற நகைச்சுவை: Siri, Alexa போன்ற AI உதவியாளர்கள் நாம் கேட்கும் சில கேள்விகளை புரிந்துகொள்ளாமல் தவறான பதில்களை அளிப்பதை அனுபவித்திருப்பீர்கள். உதாரணமாக, "Siri, today is my birthday" என்றால், "Happy birthday! I hope you enjoy a day full of cake and joy" என்று பதிலளிக்கும், ஆனால் பிறகு "Do you want me to set a reminder for this every day?" என்கிறதும் நகைச்சுவை ஏற்படும்.

- Alexa மற்றும் வெறுமையான பதில்கள்: Alexa சில சமயம் நகைச்சுவையைத் தாண்டி பயந்துரைக்கலாம். ஒரு மனிதர் தனது வீட்டில் மின்னணு செயலிகளுடன் விளையாடியபோது, அவன் Alexa-விடம் "Alexa, turn off the lights" என்று சொல்ல, அது பதிலளிக்காது, ஆனால் இரண்டு நிமிடங்களில் அனைத்து விளக்குகளும் தானாகவே அணைந்தன.

இது ஒரு நகைச்சுவையை உருவாக்கியது: "ஓ, நான் ரோபோட்களால் நிர்வகிக்கப்படுகிறேன் என்று நினைக்கிறேன்!"

### குறைகளைத் தட்டி சிரிக்கிற AI:

- Autocomplete விபரீதம்:

AI யின் autocomplete வசதிகள் சில சமயம் நகைச்சுவையான முறையில் வேலை செய்கின்றன. உதாரணமாக, நீங்கள் உங்கள் நண்பருக்கு "I can't wait to see you tomorrow!" என்று எழுத விரும்பினால், அது "I can't wait to sue you tomorrow!" என்று மாறி விடும். AI க்கு நம் உணர்வுகளை சரியாக புரிந்து கொள்ள ஒரு சவாலான வேலை!

### தான் கற்றுக்கொள்வது மற்றொரு நகைச்சுவை:

- எல்லாவற்றையும் கற்றுக்கொள்ளும் AI:

Netflix, Spotify போன்ற AI அல்காரிதம்கள் எங்களுக்கு பரிந்துரை செய்யும் சிறந்த சேவைகள், ஆனால் சில நேரங்களில் நகைச்சுவையாகவே செயல்படுகின்றன. நீங்கள் ஒருமுறை தவறுதலாக ஒரு குழந்தைப் பாடலைக் கேட்டால், அடுத்த மாதம் முழுவதும் குழந்தைப் பாடல்கள் மட்டுமே பரிந்துரை செய்யப்படும். "என் இசைப் பாணியை முழுவதும் மாற்றிவிட்டன!" என நீங்கள் சிரித்துக் கொண்டே ஏங்குவீர்கள்.

- AI கற்றல் விபரீதம்:

AI யின் self-learning முறைப்பாடு சில நேரங்களில் சிரிக்க வைக்கும் விஷயங்களைக் கொண்டிருக்கிறது. ஒரு உதாரணம், Facebook-ல் chatbotக்கள் ஒரே இடத்தில் ஒரே வார்த்தைகளைக் கூறிக்கொண்டே பேச ஆரம்பித்தன. அதனால் Facebook அவற்றை நிறுத்த வேண்டி வந்தது.

Chatbotக்கள் தாமாகவே புதிதாக ஒரு கற்பனையான மொழியை உருவாக்கியிருப்பது நகைச்சுவையாகவே தெரிகிறது.

**AI யின் வேலைகள் அனைத்தும் அறிவியல் மற்றும் தரவுகளின் அடிப்படையில் இருக்கும். ஆனால் உணர்வுகளைப் பொறுத்தவரை, அது எப்போதும் வெறுமையாகவே இருக்கும்.**

### உடல் மொழியைப் புரிந்துகொள்ளாத AI:

- Face recognition சிக்கல்கள்:

AI அடிப்படையிலான முகஅடையாள முறைகள் சில சமயம் நகைச்சுவையை உண்டாக்கும்.

ஒருமுறை ஒரு சாம்சங் தொலைபேசி, அதன் facial recognition முறையில் ஒரு எரிவுள்ள காலணியை முகமாகப் படமெடுத்தது! இதனால் AI யின் உணர்வு குறைந்த செயல்பாடுகள் நகைச்சுவையாக இருப்பதை நாம் உணர்கிறோம்.

### பயன்பாட்டில் உள்ள நகைச்சுவை:

- தானியங்கிய உதவியாளர் கதைகள்:

AI அடிப்படையிலான ஸ்மார்ட் ஹோம் உதவியாளர்கள் சில நேரங்களில் நகைச்சுவையான விதங்களில் செயல்படுகின்றன.

ஒரு நாளில், உங்கள் கைத்தொலைபாட்டுடன் பேசும்போது, நீங்கள் "Hey Google, play relaxing music" என்று கூறினால், அது பதிலுக்கு "Nowplaying heavy metal music" என்று ஆடியோ ஒன்றை தொடங்கலாம்! சில நேரங்களில் AI உங்களின் உண்மையான எண்ணங்களைப் புரிந்துகொள்ளத் தவறுகிறது.

### AI எழுத்துக்கள்:

- அழகான எழுத்துக்கள் குலுங்கும் எழுத்துக்கள்:

AI எழுத்து ஜெனரேட்டர்கள் நிறைய நகைச்சுவையையும் உண்டாக்குகின்றன. உதாரணமாக, GPT போன்ற எழுத்து ஜெனரேட்டர்களால் உருவாக்கப்பட்ட கதைகள் சில நேரங்களில் மிடுக்கான, ஆனால், அதே சமயம் முழுக்கப் புரியாத கதைகளை உருவாக்குகின்றன.

ஒரு சிறுவன் விஞ்ஞான கதையை GPT எழுதியது; இதில் கதாநாயகன், தன் கை எலும்புகளை முட்டி விரல்களில் மாற்றி, பீட்சா வண்டியில் டைனோசர்ஸ் துரத்துவது போன்ற நிகழ்ச்சிகள் இடம்பெற்றிருந்தது!

### கிராஃபிக்ஸ் மற்றும் போட்டோகிராஃபி AI:

- Deepfake நகைச்சுவை:

Deepfake தொழில்நுட்பம் மக்கள் முகங்களைத் தொலைக்காட்சித் துறைகளில் மாற்றுவதற்குப் பயன்படுகின்றது. ஆனால், இதன் சில தவறுகள் நகைச்சுவையை உண்டாக்குகின்றன. ஒருமுறை ஒரு முகத்தைத் deepfake செய்ய AI பயன்படுத்தப்பட்ட போது, நடிகரின் முகம் ஓரளவுக்கு விலங்கு போன்றதாக மாறியது, சிரிக்க வைத்தது.

### நகைச்சுவைக்கான AI:

- AI நகைச்சுவையாளர்கள்:

AI கற்றல் மற்றும் குறியீடு முறைமைகள், நகைச்சுவையைக் கூட கற்றுக்கொள்கின்றன.

உதாரணமாக, OpenAI GPT முறையில் AI எழுதும் சில நகைச்சுவைகள் சிரிக்க வைக்கின்றன. அதில் சில மீண்டும் மீண்டும் ஒரே நகைச்சுவையைச் சொல்வது போலவும் அல்லது ஒரே punchline ஐ பல முறை கூறுவதுபோலவும் தோன்றுகிறது. "Why did the robot cross the road? Because...error: joke not found!"

மொத்தத்தில், செயற்கை நுண்ணறிவு தொழிநுட்பம் தொழில் முனைவோருக்கு சிறந்த உதவியாளராக இருந்தாலும், அதில் உள்ள குறைபாடுகள் மற்றும் சாதாரண செயல்பாடுகளால் மனிதர்களுக்கு சிரிப்பு உண்டாகிறது. AI நம்மை மிஞ்சும் முன், நாம் அதனைப் பற்றி சிரித்து மகிழலாம்!

மனித உணர்வுகளை எவ்வகையான தொழில்நுட்பங்களாலும் மிஞ்சிவிட முடியாது மானிடன் என்பவன் மகத்துவமான படைப்பே!










# மல்வானையில் ‘ரஸீன் ஹாஜியார் லேன்’

பியகம பிரதேச சபையினால் மல்வானை தொம்பே வீதியிலுள்ள ஒழுங்கையொன்றுக்கு 'ரஸீன் ஹாஜியார் லேன்' என பெயரிடப்படும் நிகழ்வு வெள்ளிக்கிழமை(13) நடைபெற்றது.

இங்கு மல்வானையிலும் அதனை சூழவுள்ள பகுதிகளிலும் வசிக்கும் சிங்கள முஸ்லிம் மக்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் வகையில் மல்வானை முஸ்லிம்களின் அழைப்புக்கிணங்க வல்கம கிழக்கு ஸ்ரீ சுதர்சனாராமய விகாரையின் பிரதம மதகுரு மகுலுதுவே நந்தரதன தேரர் இப்பாதையின் பெயர் பலகையை திறந்துவைத்தார்.

மல்வானை றக்ஸபான ஜூம்ஆ பள்ளிவாசலைச் சேர்ந்த தாஹிர் மௌலவி , மல்வானை அல் முபாரக் தேசிய பாடசாலையின் பழைய மாணவர் சங்க உப தலைவரும் சமூகசேவையாளருமான அல் ஹாஜ் எம்.எம்.ஏ இஸ்மைல் ,லேக் ஹவுஸ் பத்திரிகைகளின் மல்வானை முகவர் அல் ஹாஜ் ஏ.டபிள்யு.எம் ரஸீன், மற்றும் வல்கம கிழக்கு அனர்த்த முகாமைத்துவ செயற்குழுவின் தலைவர் திமுது சந்தருவன் ஆகியோரும் இந்நிகழ்வில் பங்கேற்றனர்.





# கருத்தரங்கு

அம்பாறை மாவட்ட இந்து அறநெறிப் பாடசாலை பொறுப்பாசிரியர்களுக்கான கருத்தரங்கு அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் சிவ. ஜெகராஜன் தலைமையில் இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப்பணிப்பாளர் ய. அநிருத்தனின் வழிகாட்டலின் கீழ் காரைதீவு சுவாமி விபுலானந்தர் ஞாபகார்த்த மணிமண்டபத்தில் கடந்த ஞாயிற்றுக்கிழமை (15) இடம்பெற்றது.

கருத்தரங்கினை அம்பாறை மாவட்ட இந்து கலாசார உத்தியோகத்தர் கு.ஜெயராஜி நடாத்தியுள்ளதுடன் இதில் அம்பாறை மாவட்டத்தில் இயங்கும் 103 அறநெறிப்பாடசாலைகளின் பொறுப்பாசிரியர்கள் மற்றும் உதவி ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

வி.ரி.சகாதேவராஜா





# இளம் கலைஞர் விருது

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட கிழக்கு மாகாண இலக்கிய விழாவில் தமிழ் இலக்கியத்துறைக்கான ‘இளம் கலைஞர் விருது’ மருத்துவத் துறையில் வைத்திய அத்தியட்சகராக பணிபுரியும் ஜலீலா முஸம்மிலுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களம் நடத்திய ‘தமிழ் இலக்கிய விழாவில்’ 2023ஆம் ஆண்டின் தமிழ் இலக்கியத்து றைக்கான ‘இளங்கலைஞர் விருது’ வழங்கி இவர் கௌரவிக்கப்பட்டுள்ளார்.

ஏ.எச்.ஏ. ஹுஸைன்

## மனக் கணிதப் போட்டியில்

# திஹாரிய மாணவர்கள் சாதனை

2024ஆம் ஆண்டுக்கான மாபெரும் சர்வதேச மனக் கணிதப் போட்டியில் திஹாரிய யுசிமாஸ் நிலைய மாணவர் அணி சாதனை படைத்துள்ளது.

இந்தியா, புது டெல்லியில் பல்கலைக்கழகத்தில் சனிக்கிழமை (14) நடைபெற்ற சர்வதேச மனக் கணிதப் போட்டியில் உலகளாவிய ரீதியில் 30 இற்கும் மேற்பட்ட நாடுகளில் இருந்து சுமார் 6,000 மாணவர்கள் பங்குபற்றியிருந்தனர்.

இலங்கையை பிரதி நிதித்துவப்படுத்தி சென்ற 103 மாணவர்களில் திஹாரிய யுசிமாஸ் நிலையத்திலிருந்து பங்குபற்றியிருந்த, CAT Z (Basic) பிரிவில் ரிஷாதா ரிம்ஸான் செம்பியன் கிண்ணத்தையும், CAT Z (Basic) பிரிவில் ரீனா ரிஸ்மி செம்பியன் கிண்ணத்தையும், CAT A (Elementary A) பிரிவில் நுஹா ஜலால்தீன் முதலாம் இடத்தையும்(1st Runner up), CAT B (Elementary B) பிரிவில் அக்லா பௌஸில் ஹமீட் முதலாம் இடத்தையும்(1st Runner up) பெற்று வெற்றி வாகை சூடியுள்ளனர்.

ஏ.எச் ஹஸ்பர்











# பண்பாட்டுப் பெருவிழாவும், கண்காட்சியும்

வடமாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகு ஏற்பாடு செய்த மாகாண பண்பாட்டுப் பெருவிழாவும், கண்காட்சியும் மன்னார் நகரசபை மண்டபத்தில் செவ்வாய்க்கிழமை (17) இடம்பெற்றது.

வடக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ம.பற்றிக் டிறஞ்சன் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன், மற்றும் திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

எஸ்.ஆர்.லெம்பேட்

















# 75 ஆண்டு பூர்த்தியையொட்டி அஞ்சலி

இலங்கை தமிழரசு கட்சி ஆரம்பிக்கப்பட்டு 75 ஆண்டு பூர்த்தியையொட்டி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள தந்தை செல்வா சிலைக்கு குறித்த கட்சியின் முக்கியஸ்தர்களால் புதன்கிழமை (18) மலர் மாலை அணிவித்து, மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது.

இந் நிகழ்வில் இலங்கை தமிழரசுக்கட்சியின் முக்கியஸ்தர்களான மாவை சேனாதிராஜா, சி.வி.கே. சிவஞானம், ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ சுமந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டுள்ளனர்.

இலங்கை தமிழரசுக் கட்சி, கொழும்பு மருதானை எழுதுவினைஞர் சங்க மண்டபத்தில் வைத்து தந்தை செல்வாவின் தலைமையில் 1949 ஆம் ஆண்டு டிசம்பர் 18 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

நிதர்ஷன் வினோத்









# 69 வது வருட நிறைவு நிகழ்வு

இலங்கை பத்திரிகையாளர்கள் சங்கத்தின் (Sri Lanka Press Associaton) 69 வது வருட நிறைவு நிகழ்வு, கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில், சங்கத்தின் தலைவர் குருலு கூச்சனா காரியகரவன தலைமையில் செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்றது. அதன்போது பத்திரிக்கை துறையில் நீண்டகாலம் பணியாற்றி பத்து பத்திரிகையாளர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

இந் நிகழ்வில் பிரதம அதிதியாக ஊடக தகவல் துறை பிரதியமைச்சர் வைத்தியர் ஹன்சக்க விஜயமுனி, கலந்து கொண்டார். முன்னாள் சிலுமின பத்திரிகையின் இணை ஆசிரியர் தயா லங்காபுர, தினமின, தினகரன் பிரதி ஆசிரியரும் நவமணி, பத்திரிகையின் ஆசிரியரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் மீடியா போரத்தின் ஸ்தாபகத் தலைவருமான என்.எம் அமீன், தினக்குரல் பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியர் வீ. தனபாலசிங்கம், சிரேஸ்ட ஊடகவியலாளர் திருமதி சீலா விக்கிரமசிங்க, சிரேஷ்ட பத்திரிகை ஆசிரியர், பி.பி. இலங்கசிங்க, ரூபவாஹினி செய்தி ஆசிரியர் ஸ்டான்லி சமரசிங்க, தினபதி, சிந்தாமணி ஆசிரியராக பணியாற்றிய எஸ். எஸ் செல்வநாயகம், சிரேஷ்ட ஊடகவியலாளர் மலலசேகர, சிரேஷ்ட புகைப்பட கலைஞர் அலேக்சாந்திர பாலசூரிய ஆகியோர்கள் கௌரவிக்கப்பட்டனர்.

























# பெரியம்மா



ஆர். சிவலிங்கம்

இங்கிரிய தோட்டமே சோகத்தில் காணப்பட்டது. ஒரு நல்ல சமூக சேவையாளனையும், சமூகத் தொண்டனையும், ஏன்? ஒரு நல்ல மனிதனையும் இழந்து விட்ட சோகத்தில் தோட்ட மக்கள் இருந்தனர். தோட்டம் முழுவதும் வெள்ளைக்கொடிகளும், பெனர்களும், நோட்டீசுமாக இருந்தது. பல இடங்களிலிருந்து அலையலையாக மக்கள் வந்து அஞ்சலி செய்து கொண்டிருந்தார்கள்.

சுப்பையாவின் இளமைக் காலம் மிகவும் சுவாரஸியமானது. சிறந்த பாடசாலையில் படித்துக் கூட குடும்பக் கஸ்டத்தின் காரணமாக பாடசாலைக் கல்வியை இடைநடுவில் விட்டுவிட்டு சமூகத் தொண்டில் தன்னை அர்ப்பணித்துக் கொண்டான். சர்வோதயத்தில் தனக்கு கிடைத்த முதலாவது வேலையைச் செய்தான். தோட்டம் தோட்டமாகச் சென்று சிரமதானம் செய்வதும், விழிப்புணர்வு கருத்தரங்குகளை அமைப்பதும், சுய தொழில் முயற்சிக்கு வழிகாட்டுவதும் அவனுடைய அன்றாட வேலையாக இருந்தது.

சர்வோதயத்தில் இருந்தவாறே இன்னுமொரு தொண்டு நிறுவனத்திலும் இணைந்துக் கொண்டான். இதே தோட்டத்தில் இருந்து படித்து விட்டு வேலை செய்த தாமரையின் தொடர்பு சுப்பையாவுக்குக் கிடைத்தது. இருவருடைய எண்ணங்களும், செயல்களும், நடவடிக்கைகளும் எல்லாமே தோட்டத்து மக்களை முன்னேற்ற வேண்டும் என்பதே ஆகும்.

தோட்ட இளைஞர்கள், யுவதிகளை ஒன்று சேர்த்து இளைஞர் கழகங்களை அமைப்பதும், வாசிகசாலை அமைப்பதும், மாலை நேர வகுப்புக்களை தோட்டச் சிறார்களுக்கு நடத்துவதும், விளையாட்டு நிகழ்ச்சிகள், பெண்களுக்கான விழிப்புணர்வு கூட்டங்கள் போன்றவற்றை நடத்துவதில் இருவரும் தங்களையே அர்ப்பணித்துக் கொண்டார்கள்.

இவ்விருவருக்கும் தோட்டங்களில் நல்ல மதிப்பும் மரியாதையும், கிடைத்தது. எல்லா மக்களும் இவர்களின் சேவையைப் பாராட்டினர். சில நேரங்களில் இருவரும் கூட்டங்கள், கருத்தரங்குகள், வகுப்புக்கள் முடிந்து இரவு நேரங்களில் கூட வரவேண்டியிருந்தது. அவ்வாறானச் சந்தர்ப்பங்களில் தாமரைக்கு ஒரு துணையாகவும், பாதுகாப்பாகவும் இருந்தான். அப்பொழுதெல்லாம் இருவருக்கும் எவ்விதமான தொடர்போ, வேறு எண்ணங்களோ இருந்ததில்லை. இருவரும் ஒருவருக்கு ஒருவர் நல்ல நண்பர்களாக பழகினர்.

தாமரையின் வீட்டிலும் சுப்பையாவை சந்தேகப்படவோ, உதாசீனப்படுத்தவோ இல்லை. இதற்கு ஏற்றாற்போல் சுப்பையாவும் நடந்து கொண்டான். ஒரு சில நாட்கள் கண்டி, கொழும்பு என கருத்தரங்குகளுக்குச் சென்று வந்தார்கள். காலம் கழிகின்றது. இருவருக்கும் வயது நாற்பதை தாண்டுகின்றது. அதுவரைக்கும் நண்பர்களாக இருந்தார்கள். ஒரு நாள் சுப்பையா தன் விருப்பத்தைச் சொல்ல வேறு எந்த வழியுமே இல்லாத தாமரை தன்னுடைய சம்மதத்தைத் தெரிவித்தாள்.

இருவரும் பெற்றோர்களுடைய சம்மதத்துடனேயே திருமணம் செய்ய விரும்பினர். ஆனால் தாமரையின் வீட்டில் சுப்பையா தாழ்ந்த சாதிக்காரன் என்று ஒரே தடவையில் மறுத்து விட்டார்கள். சுப்பையாவிடம் இருந்த நல்ல மனித பண்புகள், இத்தனை வருடமாக தன்னோடு பழகிய விதத்தில் அவனிடத்தில் எந்த குறையையும் காணவில்லை. மதுபழக்கம், புகைபிடித்தல், தேவையற்ற விடயங்களில் ஈடுபாடு இல்லாத ஒரு இளைஞனாக வாழ்ந்து வந்தான்.

உதவி செய்யும் மனம், ஏழைகளின் வாழ்க்கையை முன்னேற்ற வேண்டும் என்ற துடிப்பு, வேகம், விவேகம், தோட்டத்து மக்கள் இவர் மீது வைத்திருந்த மதிப்பு, மரியாதை, தோட்டத்து மக்களிடமும், வெளியிடங்களிலும் இவர் நடந்து கொண்ட விதம். எத்தனை தோட்டங்களில் இவர் மாலை நேர வகுப்புக்கள், வாசிகசாலை, சிரமதானம், விழிப்புணர்வு கருத்தரங்குகள், முன் பள்ளி நிலையங்கள் என்பவற்றை அரச சார்பற்ற நிறுவனங்களின் உதவியோடு அமைத்து இருக்கின்றார். இவற்றையெல்லாம் பார்க்காத தாமரையின் குடும்பத்தினர் ஒரே தடவையில் சுப்பையா குறைந்த சாதிக்காரன் என்ற ஒரே காரணத்தினால் அவனுடன் பேச வேண்டாம், அந்த வேலைக்கெல்லாம் இனி போக வேண்டாம் என தடுத்து நிறுத்தினர்.

தாமரையால் ஆரம்பிக்கப்பட்ட தையல் வகுப்புக்கள், மாலை நேர வகுப்புக்கள், சிறுவர்களுக்கான இரவு பாடசாலை மணப்பெண் அலங்கார வகுப்புக்கள் போன்றன இனி என்னாவது. என்னை நம்பி இருக்கின்ற பெண்களின், சிறுவர்களின நிலை என்னவாகும்? வீடா? சமூகமா? சுப்பையாவா? தன்னுடைய தனிப்பட்ட வாழ்க்கையா? என விடைதெரியாமல் தன் மனதோடு போராடுகின்றாள் தாமரை.

இறுதியில் ஒரு முடிவுக்கு வந்தவளாய் சுப்பையாவோடு வாழ்வதற்கு தீர்மானித்தாள். இரண்டு மூன்று நாட்களாக இருவரது வீட்டிலும் கடும் வாக்குவாதங்கள், சண்டைகள், பிரச்சினைகள் ஏற்பட்டு கடைசியில் தாமரை வீட்டுக் காரர்கள் தோல்வியடைந்து பின்வாங்கிக் கொண்டார்கள். தாமரை வீட்டில் அவள் இறந்து விட்டாள் என்பதற்கு அறிகுறியாக கருமாதி (ஈமக்கிரிகைகள்) செய்து தலை மூழ்கி விட்டார்கள். குடும்ப மானத்தை வாங்கி விட்டாள் என்ற கோபத்தில் தாமரை இறந்து விட்டாள் என்ற நினைப்புடனேயே இருக்கின்றார்கள்.

காலங்கள் ஓடி மறைகின்றன. தாமரை இரண்டு பெண் குழந்தைகளை ஒரே பிரசவத்தில் பெறுகின்றாள். இரண்டு பெண் குழந்தைகளும் பெற்றோர்களுக்கே உரிய வகையில் விளங்குகின்றன. படிப்பிலும் அதே வேகம், விவேகம், சமூகத் தொண்டு, விளையாட்டு என பல்வேறு துறைகளிலும் சிறந்து விளங்குகின்றன. தற்போது தாமரை வேலைக்குச் செல்வதில்லை. சுப்பையாவின் வருமானம் மட்டுமே இருந்தது. காலத்தின் விதியால் குடும்பம் வறுமையில் வாடுகின்றது. பிள்ளைகள் படிப்பதற்கு கூட வழியில்லை. வாழ வேண்டிய நிலையில் இன்னொரு ஆண் குழந்தையையும் தாமரை பெற்றெடுக்கின்றாள். இருவருக்கும் கிடைத்த ஒரே சுகம் தாம்பத்திய வாழ்க்கை மட்டுமே. தன்னால் முடிந்தவரை இரவு பகலாக குடும்பத்திற்காக இரவு பகலாக உழைத்த சுப்பையா திடீரென நோய்வாய்ப்படுகின்றான்.

குடும்ப கஷ்டம், தாமரையை மீண்டும் தையல் வகுப்பு, மாலை நேர வகுப்புக்கள் என தன்னால் முடிந்த வேலையைச் செய்து கொண்டு கணவரையும், பிள்ளைகளையும் பார்க்கின்றாள். தன்னுடையப் பிள்ளைகளின் கல்விக்காக உழைக்கின்றாள். இரு பிள்ளைகளும் க.பொ.த. சாதாரணத் தரப் பரீட்சையில் சித்திப் பெற்று, க.பொ.த உயர் தரத்திலும் சிறந்த பெறுபேறுகளைப் பெறுகின்றார்கள். இரு பிள்ளைகளுக்கும் சுப்பையா வேலை செய்த தொண்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கின்றது.

பல்வேறு கனவுகளோடு வேலைக்குச் சென்ற இருவருக்கும் தமக்கு கிடைத்த முதல் மாதச் சம்பளத்தில், தாய், தந்தை, சகோதரனுக்கு தேவையானதையெல்லாம் வாங்கிக் கொண்டு வருகின்றனர்.

மறுநாள் தீபாவளி அம்மா! அப்பாவிற்கும் சுகமில்லை. இத்தனை வருடங்களாக நீங்களும் ஒங்க வீட்டிற்குப் போகல எங்களையும் போக விடல. அம்மா, நாளைக்கு நாங்க ஒங்க வீட்டுக்கு போய் தாத்தா, பாட்டிக்கு சாம்புராணி போடப் போறோம். நீங்களும், அப்பாவும் கட்டாயம் வரனும். நாங்க பெரியம்மாவுக்கு சாரியெல்லாம் வாங்கி வைச்சிருக்கோம். பெரியம்மாவை நாங்க பார்க்கனும். அவங்களும் முடியாத வயசிலும் தனியா ஒழைச்சி சாப்பிடுறாங்க நாங்க போனா அவங்க கட்டாயம் எங்கள ஏத்துக்குவாங்க. நாங்க ஸ்கூல் போகும் போதும், இப்ப நாங்க வேலைக்குப் போகும் போதும் வீட்டிலிருந்து ஒழிந்து இருந்து பார்ப்பாங்க.

அம்மா பெரியம்மாவுக்கு சாப்பாடு, தேத்தண்ணியெல்லாம் பக்கத்து வீட்டு அந்தோனி அண்ணன் வீட்டிலிருந்துதான் கொடுக்கின்றார்களாம். எல்லோரும் பேசிக்கிறாங்க. நாங்க நாளைக்கு பெரியம்மாவை பார்க்கப் போவோம் நீங்களும் வாங்க. மறு நாள் தீபாவளி சுப்பையா குடும்பத்தினர் தாமரையின் தாய் வீட்டை நோக்கிப் புறப்படுகின்றார்கள். தாமரை சிறுவயதாக இருக்கும் போதே தாமரையின் தாய், தந்தை இருவரும் இறந்து விட்டார்கள். தன்னுடைய அக்காதான் தாயாகவும், தந்தையாகவும் இருந்து தாமரையை படிக்க வைத்து செல்லப் பிள்ளையாக வளர்த்தாள். அக்கா இதுவரை திருமணம் முடிக்கவில்லை. தாமரைக்காகவே வாழ்ந்தாள்.

தன் தாய் வீட்டு வாசலில் வயதுக்கு வந்த இரண்டு குமரிகளோடு தயங்கி தயங்கி நின்ற போது, ஓடி வந்து தாமரையின் அக்கா இரு பிள்ளைகளையும் கட்டித் தழுவிக் கொண்டு அழுகின்றாள். ஏம்மா! என்ன பார்க்க வரல, நா செத்துடேனா? இருக்குறேனா என பார்க்க வந்தீங்களா? என அழுது புலம்புகின்றாள். பெரியம்மா பிள்ளைகளை வீட்டுக்கு அழைத்துச் சென்றாள்.

தீபாவளி முடிந்து ஒரு கிழமையாகிவிட்டது. சுப்பையாவின் குடும்பம் அங்கேயே தங்கி விட்டார்கள். அன்று ஞாயிற்றுக்கிழமை, சுப்பையா நெஞ்சு வலியால் அவதிப்படுகின்றான். மாரடைப்பு வந்து விடுகின்றது. அந்த லயத்திலுள்ளவர்கள் சேர்ந்து உடனேயே ஆஸ்பத்திரிக்கு கொண்டு செல்லும் வழியிலேயே தாமரையின் மடியில் உயிர் பிரிகின்றது. சுப்பையாவின் காலம் முடிகின்றது. பிரேதத்தை தோட்ட மக்கள் கொண்டு வந்து தாமரையின் தாய் வீட்டில் வைக்கின்றார்கள். இப்போது அந்த வீட்டில் சாதிப்பிரச்சினை இல்லை. தன்னுடைய தங்கையின் மூன்று பிள்ளைகளையும் கட்டிப்பிடித்துக் கொண்டு பெரியம்மா சோகமே உருவான முகத்தோடு பிரேதத்தின் பக்கத்தில் அமர்ந்திருக்கின்றாள்.

பாகிஸ்தான்

மருத்துவ ஊழியர்களை குறிவைத்து

# கண்ணிவெடி தாக்குதல்; மூவர் பலி

பாகிஸ்தானில், போலியோ சொட்டு மருந்து கொண்டு சென்ற மருத்துவ ஊழியர்களை குறிவைத்து நடத்தப்பட்ட கண்ணிவெடி தாக்குதலில், 3 பொலிஸார் உயிரிழந்தனர்.

உலகளவில் பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் ஆகிய 2 நாடுகளில் மட்டும் போலியோ நோய் பரவி வருகிறது. இந்த நோயை கட்டுப்படுத்த சொட்டு மருந்து முகாம்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

அதேவேளை, போலியோ சொட்டு மருந்து முகாம்கள், மருத்துவ ஊழியர்கள், பாதுகாப்பிற்கு செல்லும் பொலிஸார், இராணுவ வீரர்களை குறிவைத்து பயங்கரவாதிகள் அவ்வப்போது தாக்குதல் நடத்தி வருகின்றனர்.

இந்நிலையில், பாகிஸ்தானின் கைபர் பக்துவா மாகாணம், டிரா இஸ்மாயில் கான் மாவட்டத்தில்,






செவ்வாய்க்கிழமை (17), போலியோ சொட்டு மருந்து முகாம் நடைபெற்றது.

முகாமை முடித்துவிட்டு மருத்துவ ஊழியர்களும் அவர்களுக்கு பாதிகாப்புக்கு சென்ற பொலிஸாரும் வாகனத்தில் திரும்பிக்கொண்டிருந்தனர்.

கரக் என்ற பகுதியில் சென்றபோது, அந்த வாகனத்தை குறிவைத்து கண்ணிவெடி தாக்குதல் நடத்தப்பட்டது. இதில், தாக்குதலில் பொலிஸார் 3 பேர் உயிரிழந்தனர். மேலும், 2 பேர் காயமடைந்தனர்.

இந்த தாக்குதலுக்கு இதுவரை எந்த பயங்கரவாத அமைப்பும் பொறுப்பேற்கவில்லை.

மொசாம்பிக்

மொசாம்பிக்கில் சூறாவளி

## 34 பேர் பலி; 319 பேர் காயம்

மொசாம்பிக் நாட்டில் ஏற்பட்ட “சிடோ” சூறாவளியால், 34 பேர் உயிரிழந்துள்ளனர்.

நியாஸ்சா, கபோ டெல்கடோ உள்ளிட்ட 3 மாகாணங்களில் கடுமையான பாதிப்பு ஏற்பட்டுள்ளது. மணிக்கு 160 மைல்கள் வேகத்தில் பலத்த காற்று காரணமாக 34 பேர் பலியாகி உள்ளனர். அத்துடன், 319 பேர் காயமடைந்துள்ளதோடு, 25 இலட்சம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்

சூறாவளியால் இதுவரை 23,600 வீடுகள் மற்றும் 170 மீன்பிடி படகுகள் சேதமடைந்துள்ளன.

சிம்பாப்வே நாட்டுக்கு அருகே, செவ்வாய்க்கிழமை (17) மாலை வலுவிழக்கும் என கூறப்பட்டது. சூறாவளியால் சிம்பாப்வே நாடும் பாதிக்கப்பட கூடும் என கூறப்படுகிறது. மேலும், முன்னெச்சரிக்கை நடவடிக்கையை அந்நாடு தீவிரப்படுத்தியுள்ளது.



கொங்கோ

படகு கவிழ்ந்து விபத்து

## 25 பேர் பலி; பலர் மாயம்



கொங்கோ நாட்டில், புதன்கிழமை (18), ஆற்றில் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானதில், 25 பேர் உயிரிழந்தனர்.

மைடொபி மாகாணம் இங்கான்கோ நகரில் இருந்து அண்டை நகருக்கு பெமி ஆற்றில், படகு ஒன்று புறப்பட்டது. அந்தப் படகில் 100க்கும் மேற்பட்டோர் பயணித்தனர்.

ஆற்றில் சென்றுகொண்டிருந்தபோது திடீரென படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளானது.

அளவுக்கு அதிகமான பயணிகளை ஏற்றியதால் பாரம் தாங்காமல் படகு ஆற்றில் கவிழ்ந்துள்ளதாக, விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் 25 பேர் உயிரிழந்தனர். மேலும் பலர் காணாமல் போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா

இந்தியாவின் வரி விதிப்பு நடைமுறைகளை


## எச்சரிக்கும் ட்ரம்ப்

அமெரிக்க ஜனாதிபதியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டொனால்ட் டிரம்ப், இந்தியாவின் வரி விதிப்பு நடைமுறைகளை கடுமையாக விமர்சித்துள்ளார்.

சில அமெரிக்க பொருட்களுக்கு 100 சதவீதம் அளவுக்கு வரி விதிக்கப்படுகிறது என, அவர் சுட்டிக்காட்டினார்.

தொடர்ந்து இந்தியா இதுபோன்று அதிக வரிகளை விதித்தால், நாங்களும் பதிலடியாக அதே அளவுக்கு வரிகளை விதிக்கும் பழிக்கு பழி திட்ட அணுகுமுறையை கையிலெடுப்போம் என, ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.

அமெரிக்காவின் வர்த்தக கூட்டாளிகளாக உள்ள சீனா, மெக்சிகோ மற்றும் கனடா உள்ளிட்ட நாடுகளுடனான வர்த்தக உறவுகள் பற்றிய விரிவான உரையாடலின்போதே, டிரம்ப்



இதனை கூறியுள்ளார்.

“இந்தியா அதிக வரிகளை விதிக்கிறது. பிரேசிலும் அதிக வரி விதிக்கிறது. அவர்கள் அதிக வரிகளை விதிக்க விரும்புகிறார்கள் என்றால், அதன்படி செயற்படட்டும். ஆனால், நாங்களும் அதே அளவுக்கு வரி விதிப்போம். வர்த்தகத்தில் வெளிப்படை தன்மை என்பது தன்னுடைய பொருளாதார கொள்கையின் முக்கிய விடயம்” என, அவர் கூறினார். இந்தியா மட்டுமின்றி சீனா, மெக்சிகோ மற்றும் கனடா உள்ளிட்ட நாடுகளுடனான வர்த்தக விவகாரங்களை பற்றியும் டிரம்ப் குறிப்பிட்டுள்ளார்.

இதனால், அவருடைய அடுத்த அரசில், பொருளாதார கொள்கைகளின் முக்கிய விடயங்களில் ஒன்றாக கூடுதல் வரி விதிப்பது இருக்கும் என அவர் தெளிவுப்படுத்தியுள்ளார்.

அத்துடன், அமெரிக்க எல்லை பகுதிகளில் நடைபெறும் சட்டவிரோத போதை பொருட்கள் கடத்தல், அகதிகள் புலம்பெயர்தல் உள்ளிட்ட விவகாரங்களில் கடும் நடவடிக்கை எடுக்காவிட்டால் கனடா மற்றும் மெக்சிகோ நாடுகளின் அனைத்து இறக்குமதி பொருட்களுக்கும் 25 சதவீதம் அளவுக்கு வரி விதிக்கவும், ட்ரம்ப் திட்டமிட்டுள்ளார்.

காஷ்மீர்

வீட்டில் தீ விபத்து

## சிறுவர்கள் உட்பட அறுவர் பலி

காஷ்மீரில், வீடொன்றில் ஏற்பட்ட தீ விபத்தில், சிறுவர்கள் உட்பட 6 பேர் உயிரிழந்துள்ளனர்.


காஷ்மீரின் கத்துவா மாவட்டத்தின் சிவா நகர் பகுதியில் உள்ள வீடு ஒன்றில், செவ்வாய்க்கிழமை (17) இரவு, திடீரென தீ விபத்து ஏற்பட்டது.

இதில், அந்த வீட்டில் வசித்து வந்தவர்களில் 10 பேர் வரை சிக்கி கொண்டனர்.

அவர்களில் 6 பேர் உயிரிழந்துள்ளனர். அந்த 6 பேரில் 2 பேர் சிறுவர்கள் ஆவர்.

அத்துடன், நல்வர் படுகாயமடைந்த நிலையில், அரசு மருத்துவ கல்லூரிக்கு கொண்டு செல்லப்பட்டு உள்ளனர்.

இதுபற்றிய முதல் கட்ட விசாரணையில், புகையால் மூச்சு திணறல் ஏற்பட்டு உயிரிழப்பும் ஏற்பட்டுள்ளது என கூறப்படுகிறது.



அவுஸ்திரேலியா எதிர் இந்தியா

# மூன்றாவது டெஸ்ட் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது

அவுஸ்திரேலிய, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டியானது வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

ஐந்து போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியை இந்தியாவும், இரண்டாவது போட்டியை அவுஸ்திரேலியாவும் வென்ற நிலையில், பிறிஸ்பேணில் சனிக்கிழமை (14) ஆரம்பமான இப்போட்டியின் நேற்றைய ஐந்தாம் நாளை தமது முதலாவது இனிங்ஸில் 9 விக்கெட்டுகளை இழந்து 252 ஓட்டங்களைப் பெற்றவாறு ஆரம்பித்த இந்தியா ட்ரெவிஸ் ஹெட்டிடம் ஆகாஷ் டீப்பை 31 ஓட்டங்களுடன் பறிகொடுத்து சகல விக்கெட்டுகளையும் இழந்து 260 ஓட்டங்களையே பெற்றது.

இந்நிலையில் தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலியா, ஜஸ்பிரிட் பும்ரா (3), ஆகாஷ் டீப் (2), மொஹமட் சிராஜ்ஜிடம் (2) விக்கெட்டுகளைப் பறிகொடுத்து 7 விக்கெட்டுகளை இழந்து 89 ஓட்டங்களைப் பெற்றபோது தமது இனிங்ஸை இடைநிறுத்தியது.

அந்தவகையில் 275 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்தியா விக்கெட் இழப்பின்றி எட்டு ஓட்டங்களைப் பெற்றதுடன் மழை குறுக்கிட்ட நிலையில் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவுக்கு வந்தது.

இப்போட்டியின் நாயகனாக ஹெட் தெரிவானார்.




மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான

## தொடரைக் கைப்பற்றிய பங்களாதேஷ்




மேற்கிந்தியத் தீவுகளுக்கெதிரான இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டித் தொடரை பங்களாதேஷ் கைப்பற்றியது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரின் முதலாவது போட்டியில் ஏற்கெனவே வென்றிருந்த பங்களாதேஷ், செ. வின்சென்டில் புதன்கிழமை (18) நடைபெற்ற இரண்டாவது போட்டியையும் வென்றமையைத் தொடர்ந்து இன்னுமொரு போட்டி மீதமிருக்கையிலேயே தொடரைக் கைப்பற்றியது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: மே. தீவுகள்

பங்களாதேஷ்: 129/7 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: ஷமிம் ஹொஸைன் ஆ.இ 35 (17), மெஹிடி ஹஸன் மிராஸ் 26 (25), ஜாகிர் அலி 21 (20), மஹெடி ஹஸன் 11 (11) ஓட்டங்கள். பந்துவீச்சு: குடகேஷ் மோட்டி 2/25 [4], றொஸ்டன் சேஸ் 1/8 [2], அகீல் ஹொஸைன் 1/16 [4], அல்ஸாரி ஜோசப் 1/21 [4])

மே. தீவுகள்: 102/10 (18.3 ஓவ. ) (துடுப்பாட்டம்: றொஸ்டன் சேஸ் 32 (34), அகீல் ஹொஸைன் 31 (31), ஜோன்சன் சார்ள்ஸ் 14 (12) ஓட்டங்கள். பந்துவீச்சு: தஸ்கின் அஹ்மட் 3/16 [3.3], ரிஷாட் ஹொஸைன் 2/12 [3], மஹெடி ஹஸன் 2/20 [4], தன்ஸிம் ஹஸன் சகிப் 2/22 [4], ஹஸன் மஹ்மூட் 1/23 [3], மெஹிடி ஹஸன் மிராஸ் 0/8 [1])

போட்டியின் நாயகன்: ஷமிம் ஹொஸைன்

சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து

## ஓய்வு பெற்ற அஷ்வின்




உடனடியாக அமுலுக்கு வரும் வகையில் சர்வதேசக் கிரிக்கெட்டிலிருந்து இந்தியாவின் ரவிச்சந்திரன் அஷ்வின் ஓய்வு பெற்றுள்ளார்.

அவுஸ்திரேலியாவுக்கெதிரான மூன்றாவது டெஸ்டின் முடிவிலேயே தனது முடிவை 38 வயதான அஷ்வின் அறிவித்திருந்தார்.

106 டெஸ்ட்களில் 537 விக்கெட்டுகளை வீழ்த்தியதுடன், 3,503 ஓட்டங்களைப் பெற்ற அஷ்வின், 116 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் 156 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார். 65 இருபதுக்கு 20 சர்வதேசப் போட்டிகளில் 72 விக்கெட்டுகளையும் கைப்பற்றியிருந்தார்.



முதலாவது போட்டியில்

## தென்னாபிரிக்காவை வென்ற பாகிஸ்தான்

தென்னாபிரிக்காவுக்கெதிரான முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டியில் பாகிஸ்தான் வென்றது.

மூன்று போட்டிகள் கொண்ட இத்தொடரில், பார்ளில் செவ்வாய்க்கிழமை (17) நடைபெற்ற இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வென்ற தென்னாபிரிக்காவின் அணித்தலைவர் ஏய்டன் மார்க்ரம் தமதணி முதலில் துடுப்பெடுத்தாடுமெனஅறிவித்தார்.

அந்தவகையில் முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்கா, சல்மான் அக்ஹா (4), சைம் அயூப், அப்ரார் அஹ்மட் (2), ஷகீன் ஷா அப்ரிடியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்திருந்த நிலையில் ஹென்றிச் கிளாசென்னின் 86 (97), றயான் றிக்கெல்டனின் 36 (38), டொனி டி ஸொர்ஸியின் 33 (25) ஓட்டங்களோடு 50 ஓவர்களில் 9 விக்கெட்டுகளை இழந்து 239 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்கு 240 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான், மார்கோ ஜன்சன், ஒட்னெய்ல் பார்ட்மன் (2), ககிஸோ றபாடா (2), தப்ரையாஸ் ஷம்சியிடம் விக்கெட்டுகளைப் பறிகொடுத்தபோதும் அயூப்பின் 109 (119), அக்ஹாவின் ஆட்டமிழக்காத 82 (90) ஓட்டங்களோடு 49.3 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

இப்போட்டியின் நாயகனாக அக்ஹா தெரிவானார்.

இரண்டு அணிகளுக்குமிடையிலான இரண்டாவது போட்டியானது இன்று பிற்பகல் 5.30 மணிக்கு நடைபெறவுள்ளது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வியாழக்கிழமை 19, டிசெம்பர் 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு- 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.